★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 மாசி 17 ஜ. அவ். 15 இதழ் 19

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 1—3—83

## பகிஷ்கரிக்கும் மாணவருக்கு கடன் வசதிகள் நிறுத்தம்!

### வங்கிகளுக்கு கல்பகே உத்தரவு

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்தில் வகுப்புகளை பகிஷ்கரித்து வரும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கடன்வசதிகளை நிறுத்தும்படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரும், உயர் கல்வி அமைச்சின் செயலாளருமான பேராசிரியர் ஸ்டான்லி கல்பகே வங்கி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

வகுப்புகளை பகிஷ்கரிக்கும் மாணவர்களுக்கான மகாபொல புலமைப்பரிசிலும் நிறுத்தப்படுமென்றும் பேராசிரியர் ஸ்டான்லி கல்பகே தெரிவித்தார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் டிப்ளோமா பயிற்சியை மேற்கொண்டுவரும் 450 ஆசிரிய மாணவர்களும் வகுப்புகளை பகிஷ்கரித்து வருகின்றனர்.

இவர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளத்துடன் கூடிய லீவு ரத்துச் செய்யப்பட்டு, பாடசாலைகளுக்கு அனுப்பப்படவுள்ளதாகவும் பேராசிரியர் கல்பகே தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 23ம் திகதிமுதல் சில கோரிக்கைகளை முன்வைத்து கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் வகுப்புகளை பகிஷ்கரித்து வருவது தெரிந்ததே [வெ]

★ நீர்வேலி வங்கிக் கொள்ளை - இரட்டைக் கொலை வழக்கு:

# தங்கத்துரை, குட்டிமணியுடன் 6 எதிரிகளுக்கும் ஆயுட்சிறை!

## 150 பக்கங்களில் தீர்ப்பு

(கொழும்பு)

**நீர்வேலி கொலை கொள்ளை வழக்கில் சந்தேகநபர்கள் 6பேருக்கும்நேற்று கொழும்பு மேல்நீதிமன்றத்தில் தண்டனை விதிக்கப்பட்டது. முதல் குற்றச்சாட்டுகள் இரண்டுக்கும் தலா 15வருட கடுழியச் சிறைத்தண்டனையும் ஏனைய இரு குற்றச் சாட்டுகளுக்கும் ஆயுள்கால சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.**

**எதிரிகள் விபரம்**

இந்த வழக்கில் தங்கத்துரை அல்லது நடராஜா தங்கவேலு முதலாம் எதிரியாகவும் குட்டிமணி அல்லது செல்வராஜா யோகச்சந்திரன் இரண்டாவது எதிரியாகவும், தேவன் அல்லது செல்லத்துரை சிவசுப்பிரமணியம் மூன்றாவது எதிரியாகவும் சிவபாதன் மாஸ்டர் நான்காம் எதிரியாகவும் சுந்தரம் அல்லது ஸ்ரீசபாரத்தினம் ஐந்தாம் எதிரியாகவும் வைத்திலிங்கம் நடேசுதாசன் அல்லது செனட்டர் 6ம் எதிரியாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தனர்.

ஐந்தாவது எதிரியான சுந்தரம் ஸ்ரீசபாரத்தினம் அல்லது ஸ்ரீ என்பவர் நீதிமன்றத்தில் ஆஜராகாமலேவிசாரணை நடத்தப்பட்டது.

பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் மேல்நீதிமன்றத்தில் நீதவான் திரு சி, எல் ரி. மூனமலே முன்னிலையில் நடைபெற்றுவந்த இந்தக் கொலை, கொள்ளை வழக்கில் நீதவான் எதிரிகள் 6பேரையும் குற்றவாளிகளாகக்கண்டு தண்டனை வழங்குவதை நேற்றுவரை ஒத்திவைத்திருந்தார்.

வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெற்றபோது மூன்றும் எதிரியான தேவன் தடுப்புக் காவலில் வைத்து அளித்துள்ள வாக்குமூலத்தை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளலாமா என்ற கேள்வி எதிரிகளின் சட்டத்தரணிகளால் எழுப்பப்பட்டு அதுகுறித்து வழக்குக்குள்ளேயே இன்னொரு வழக்காக (வொயர் டயர் ஒரு விசாரணை நடத்தப்பட்டு வாக்குமூலம் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளலாம் என்று தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் மக்கள் வங்கிக்குச் சொந்தமானபணத்தை கொள்ளையடிக்க சதித்திட்டம் தீட்டியதாக முதல் குற்றச்சாட்டுக்கு 15 வருட கடுழியச் சிறைத்தண்டனை ஆறு எதிரிகளுக்கும் விதிக்கப்பட்டது.

1981ம் ஆண்டு மார்ச் மாதம் 25ம் திகதி நீர்வேலியில் வைத்து 81 லட்சம் ரூபாய் பணத்தைக் கொள்ளையடித்தது என்ற இரண்டாவது குற்றச்சாட்டுக்கும் ஆறு எதிரிகளுக்கும் 15 வருடக் கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

முத்துபண்டா என்ற கான்ஸ்டபிளைக் கொலை செய்ததான மூன்றாவது குற்றச்சாட்டின் மீதும், அபேரத்ன பண்டா என்ற கான்ஸ்டபிளைக் கொலை செய்ததான

[8-ம் பக்கம் பார்க்க]

## 2 பஸ்கள் தீக்கிரை!

### திருநெல்வேலிச் சந்தியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான சுமார் ஆறு லட்சம் ரூபா பெறுமதியான இரு பஸ்கள் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் இனந்தெரியாத இளைஞர்களால் துப்பாக்கி முனையில் நிறுத்தப்பட்டு பெற்றோல் ஊற்றி தீயிட்டுக் கொழுத்தப்பட்டுள்ளது!

இரு பஸ்களும் முற்றாக எரிந்துவிட்டன. இந்த இரு பஸ்களும் கோண்டாவில் டிப்போவைச் சேர்ந்தது.

764 பாதை இலக்கம் கொண்ட 23 ஸ்ரீ 4614, 23ஸ்ரீ 8033 ஆகிய இரு பஸ்களுமே எரிக்கப்பட்டன

23ஸ்ரீ4614 இலக்கம்கொண்ட பஸ் திருத்தி அமைக்கப்பட்

(8-ம் பக்கம் பார்க்க)

மருதனமடம்

## ஆசிரமத்தில் இராணுவம் நடத்திய சோதனை!

### இடங்கள் முழுவதும் அலசி ஆராயப்பட்டது!!

(ஏ. வி. மாணிக்கம்)

மருதனமடம் சந்திக்கு அருகாமையில் உள்ள கிறிஸ்தவ சேவா ஆச்சிரமம் நேற்றுக் காலை இராணுவத்தினர் கவச வாகனம் சகிதம் முற்றுகையிட்டு பலத்த சோதனை நடத்தினர்.

நேற்றுக்காலை 6-30மணி தொடக்கம் அரைமணித்தியாலத்துக்கு ஒரு தடவையாக நான்கு தடவைகள் இராணுவத்தினர் ஆச்சிரமத்துக்குள் புகுந்து சோதனை செய்ததாக ஆசிரமத்துக்குப் பொறுப்பான குருவான சங். சகோதரர் சாம்.அல்பிரட் தெரிவித்தார்.

அதே நேரத்தில் நேற்று யாழ் நகரில் சுவாமிகளைப் பற்றி பலத்த வதந்திகள் பரவத்தொடங்கிவிட்டது.

[8ம் பக்கம் பார்க்க]

வட்டு. எம். பி.யாக

## 'நீலன்' நியமனம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை எம். பி. யாக திரு. நீலன் திருச்செல

[8ம் பக்கம் பார்க்க]

## "விசாரணைக் குழு அமைத்து உண்மை நிலை அறியுங்கள்!

### என் பொதுவாழ்வு ஒரு திறந்த புத்தகம் மூடி மறைப்பதற்கு ஒன்றும் இல்லை"

**கோப்பாய் எம்.பி. 'ஆலால்' அறிக்கை**

(யாழ்ப்பாணம்)

"கூட்டுறவுத் திணைக்களத்தில் சிலருக்கும், இத்துண்டுப் பிரசுரத்துக்கும் அதைத் தொடர்ந்து என்மீது நடத்தப்பட்ட துப்பாக்கித் தாக்குதலுக்கும் தொடர்புண்டா? இவற்றையெல்லாம் ஆழமாக விசாரணை செய்ய ஒரு விசாரணைக் குழு நியமிக்கப்படுமானால் உண்மை நிலையை வெளிப்படுத்தமுடியும்" என்று துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் கோப்பாய் எம். பி திரு ஆ. மு. ஆலாலசுந்தரம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

படுகாயமடைந்து படுக்கையில் இருக்கும் என்னை அவதூறு செய்து சில சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருப்பதாக அறிகின்றேன். பதிலளிக்கும் வாய்ப்பின்றி ஜீவமரணப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் ஒருவனை பற்றி பயபட்டமான பொய்களை மக்கள் முன் வைப்பதின் மூலம் தாங்கள் செய்த பாதகச் செயலை ஒட்டி பொதுமக்கள் மத்தியில் வளர்ந்துவரும் எதிர்ப்பில் இருந்து தப்பலாம் என்று நினைக்கின்றார்கள் போலும்.

எனக்கு எதிராக சில வாரங்

(8-ம் பக்கம் பார்க்க)

## பத்மநாதன் கொலை வழக்கு ஏப்ரல் 27-ல் விசாரணை

(கொழும்பு)

இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கொலை வழக்கு கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நீதிபதி திரு ரூபேர்ட் சில்வா முன்னிலையில் ஏப்ரல் மாதம் 27ம் திகதிவிசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

1978ம் ஆண்டு மே மாதம் 6ம் திகதி இன்ஸ்பெக்டர்பத்மநாதன் நல்லூரில் அவரது இல்லத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்,

இந்த வழக்கில் குட்டிமணி அல்லது செல்வராஜாயோகச்சந்திரன், கணேசநாதன் ஜெகநாதன் ஆகிய இருவரும் எதிரிகளாகக் குறிப்பிடப்பட்டுவுள்ளனர்.

எதிரிகள் சார்பில் திரு எம். சிவசிதம்பரம் திரு எஸ் நவரத்தினத்தின் (கரிகாலன்) அனுசரணையுடன் ஆஜராகவிருக்கிறார்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல இனத்தைச் சேர்ந்த அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு சேவயர் (யாழ்ப்பாணம் மானிப்பாய் மெயின் வீதி) ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை, சங்கக்கடை உடன் இருக்கும் வதிவிடம். 6353

பயனியர் (AMP) செற் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சாயபவி ட்ரேட் சென்ரர், 46, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 6366

100 வீதம் மறுசீரமைக்கப்பட்ட Honda C-90 1979-ம் ஆண்டு மொடல் மோட்டர் சைக்கிள்கள் மிகச்சிறந்த நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க: N. சுசந்தராஜா, இல. 3, கோவில் வீதி, (வேதக்கோவில் அருகில்), நுணுவில் மேற்கு, நுணுவில், சாவகச்சேரி. 6362

புத்தம் புதிய ரெக்நீஸ் டெக் செற் 7 ஜண்டுகள் 90 வாற் ஆவுட் புற், மற்றும் K.D.K., சைன்யோ Fான்கள், இறக்குமதிசெய்த தரை விரிப்பு, நிலக்கம்பளம் முதலியன உடனடி விற்பனைக்கு உண்டு. நேரில் பார்வையிடலாம். V S கந்தசாமி, பழம் ரோட், ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை. 6352

## தேவை

சுண்டிக்குளி, கொழும்புத்துறைக்கு அருகாமையில் கார் போகக்கூடிய வீதியுள்ள ஒரு பரப்புக்காணி தேவை. விலை, இடம் என்பனவற்றைக் குறித்துக் கடிதமூலம் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. 6363 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 6363

சைக்கிள் வேலையில் தேர்ச்சி பெற்றோர் உடனடியாக வேலைக்குத் தேவை. திறமைக்கேற்ற ஊதியமும், சாப்பாட்டுடன் இருப்பிட வசதியும் செய்துகொடுக்கப்படும். 5-3-83-க்கு முன் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும். ஜெயா சைக்கிள் சென்ரர், பிரதான வீதி, ஊர்காவற்றுறை. 6365

## தேவை

ஹொட்டல் ஒன்றுக்கு சமையல் வேலை உதவியாளரும், ஹொக்கி ஒன்றும் தேவை 324, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம். 6368

## சேவை

டைப்பிங் சேவை ஆங்கிலத்தில் டைப் செய்துகொடுக்கப்படும் K.L M Krishnapillaiy, ஸ்ரீபராசக்தி சோதிட நிலையம், 151, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 6367

## பயிற்சி

கஜன் தொழில் நுட்பப் பயிற்சி 1-3-83-ல ஆரம்பமாகின்றன. எலக்றிக் வெல்டிங் (Arc and Gas) எலக்றிக் வயரிங், பிற்றிங், P.M.G'S, ரான்ஸிஸ்ரர் தொழில் நுட்பம், கட்டிடக்கலை படம்வரைதல், ஆங்கில உரையாடல் முதலியன. 555, காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். 6355

## கல்வி

C. E. I. Part I. 2 May 1984 (London Engineering) வார, வார இறுதி வகுப்புகள் 9-3-83 அன்று 4 மணிக்கு ஆரம்பமாகின்றது. இருபாலாரும் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி, JAST, 22, இராமையாச்செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 6276

## பதவி வெற்றிடம்

### கிளை முகாமையாளர்கள் தரம் 111

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கோரப்படுகின்றன.

காரியாலயத்தில் ரூபா 3/- செலுத்தி விண்ணப்பப்படிவங்களையும், விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி 10-03-1983.

பொது முகாமையாளர்.
தென்மராட்சி மேற்கு
ப. நோ. கூ. சங்கம்,
கைதடி.
1983-02-25. [6371]

## 7-ம் ஆண்டு நினைவு



ஸ்ரீ பத்மநாதன் இராசா
பிறப்பு: 25-12-63
மறைவு: 1-3-76

பூண்டெரிந்த என்சோதி விளக்குமங்கி
ஏழாண்டு கண்ணீரில் மூழ்கிவிட்டோம்
நீண்ட தொடர் கதையாளன் நினைவு எங்கள்
நெஞ்சத்தால் படியாத நேரமுண்டோ
கூண்டினிலே இருந்தவர் களைத் தவிக்கவிட்டு
கொஞ்சும் மணிக் கிளியே நீ பறந்து சென்று
ஆண்டவனோடிருந்து பேசுகிறாய்
அந்த மனச்சாந்தியிலே வாழ்கின்றோம்

எங்கள் அன்பே உருவான செல்வத்தின் நினைவால் வாடும்

அம்மா, குவைத் அண்ணா,
அண்ணி, பிள்ளைகள்.
கொழும்பு அண்ணா,
அண்ணி, பிள்ளைகள்.
கொழும்பு அக்கா.
6369

## பெயர் மாற்றம்

வட்டுக்கோட்டை சிவன் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மன்னார் பிரதான வீதியில் வசிக்கும் ப. கேசவநாதன் ஆகிய நான் எனது பெயரை ப. கேசவராஜா (P Keshavarajah) என மாற்ற உத்தேசித்துள்ளேன் இதன்பின்னர் அனைத்து வேலைகளிலும் ப. கேசவராஜ் என கையொப்பமிடுவேன் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

இவ்வண்ணம்
ப. கேசவராஜா.
[6370]

## பெயர் மாற்ற அறிவித்தல்

நயினாதீவைப் பிறப்பிடமாகக்கொண்ட விஸ்வலிங்கம் அபிராமியாகிய நான், எனது பதிவுப் பெயர் ஸ்ரீ இலங்கா என்பதாக இருந்தாலும் எனது பெற்றோராலும் மற்றவர்களாலும் வழமையாக அழைத்துவரும் அபிராமி என்னும் பெயரையே 1-1-1983 தொடக்கம் எனது பதிவுப் பெயராகக் கொண்டுள்ளேன் என்பதை இதனால் தெரியப்படுத்திக்கொள்கின்றேன்.

இங்ஙனம்,
வி. அபிராமி
84/1, அரசடி வீதி,
யாழ்ப்பாணம். 6375

## கிளிநொச்சிச் செய்திகள்

கே. வி. கே. திருலோகமூர்த்தி

கிளிநொச்சியில் கொத்தணி முறை வெற்றியளித்ததைத் தொடர்ந்து, உருத்திரபுரம் பகுதியிலும் கொத்தணி முறையை ஏற்படுத்துமாறும், 7ம் வாய்க்கால் இந்துமகா வித்தியாலயத்தை இதன் தலைமைப் பாடசாலையாக அமைக்குமாறும் கிளிநொச்சி எம்.பி திரு. வி ஆனந்தசங்கரி கல்விப் பகுதியினருக்குக் கோரிக்கை விடுத்துள்ளார்.

### கிராமோதயசபை எழுச்சிவிழா

உருத்திரபுரம் கிராமோதய சபையின் எழுச்சிவிழா எதிர்வரும் 4ம் திகதி உருத்திரபுர மகாவித்தியாலயத்தில் திரு. கா. நாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது திரு. வி. ஆனந்தசங்கரி எம். பியும் தமிழ்ப் பேராசிரியர் கணபதிப்பிள்ளையும் விழாவில் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்ள உள்ளனர். விசேட சேவை உத்தியோகத்தர் திரு யோகேந்திரன் விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

### சிரமதான மூலம் விளையாட்டு மைதானம்

இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் விளையாட்டு மைதானம் ஒன்று சிரமதானம்மூலம் அமைக்கப்பட்டது. வட்டக்கச்சி இளைஞர் கழகத் தலைவர் திரு கே. பற்குணசிங்கம் தலைமையில் பிரஸ்தாப கழக உறுப்பினர்கள் இதில் பங்குபற்றினர். விசேட சேவை அதிகாரி திரு. ஐ சிவராசாவும் அதிபர் செல்வி ரி. வேலுப்பிள்ளையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டனர். கழகசெயலாளர் எஸ். பாலச்சந்திரன் நன்றி தெரிவித்துப் பேசினார்!

### அபிவிருத்திப் பயிற்சி வகுப்பு

கிளிநொச்சிப் பிரதேச அபிவிருத்தி பற்றிய பயிற்சிவகுப்பு எதிர்வரும் 14ம் திகதி முதல் 18ம் திகதி வரை கிளிநொச்சி நகரமண்டபத்தில் நடைபெறவுள்ளது. இலங்கை மன்றக் கல்லூரியினால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள இவ் வகுப்பில் 50 பேர் பங்குபெறுகின்றனர்.

இலங்கை மன்றக்கல்லூரி விரிவுரையாளர் திருமதி சிவச்சந்திரன் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

### விருந்து

பரந்தன் கிளிநொச்சி ரோட்டறிக்கழகத்தினர் ஐகெயர் ஸ்ரீலங்கா நிறுவனப் பிரதிநிதிகளுக்கும் பத்திரிகையாளருக்கும் மதியபோசன விருந்து வழங்கிக் கௌரவித்தனர். பிரஸ்தாப கழகத் தலைவர் திரு. ஆ. குலசேகரம்பிள்ளை தலைமையில் இவ்விருந்து வைபவம் நடைபெற்றது.

### 4000 பேர் கண்சிகிச்சை

கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரியில் இடம் பெற்றுவரும் கண்சத்திரசிகிச்சை மற்றும் கண்கிளினிக்கில் நாலாயிரம் கண் நோயாளர்கள் பங்குபற்றி சிகிச்சை பெற்றனர். செயபியன் பற்று, பளை பூநகரி ஆகிய பகுதி நோயாளர்களே இதில் கூடுதலாகக் கலந்துகொண்டனர்.

### சுப்ரமுனியசுவாமி விஜயம்

மகரிஷிஸ்ரீசிவாய சுப்பிரமணிய சுவாமிகள் எதிர்வரும் 11-ம் திகதி கிளிநொச்சிக்கு வருகை தரவுள்ளார் கரைச்சி சைவவித்தியா விருத்திச்சங்க அழைப்பின்பேரில் கிளிநொச்சி குருகுலத்திற்கு வருகை தரவுள்ள மகரிஷி குருகுல சர்வ சக்தி பீட அபிஷேக விழாவிலும் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது 11-ம் திகதி காலை கிளிநொச்சிக்குவரும் சுவாமிகளின் வருகையை முன்னிட்டுக் கண்டாவளை கிராமசேவை அலுவலர் க. சி இராசையா தலைமையில் வரவேற்புக்குழு ஒன்றும் இயங்கி வருகிறது.

### கட்டிடத் திறப்பு விழா

கிளிநொச்சி 7-ம் வாய்க்கால் இந்து மகாவித்தியாலய மாடிக்கட்டிடத் திறப்புவிழாவும் மின் ஒளி தொலைக்காட்சி வழங்கும் வைபவமும் அதிபர் வேலாயுதம் தலைமையில் நடைபெற்றது. கிளிநொச்சி

[7 பக்கம் பார்க்க]

## யாழ். மாவட்டத்தில் வேலைவாய்ப்பு

ஓட்டோ றிக்சோ ஓடுவதில் நல்ல அனுபவமுள்ள சாரதிகள் தேவை.
கார், மோட்டார் சைக்கிள் லைசென்ஸ் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
தகுந்த நற்சாட்சிப் பத்திரங்கள் அவசியம்.
முழு விபரங்களுடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.
375/12, நாவலர் வீதி, "தமிழகம்",
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(6361)

## HONDA 400 CC TWIN

வெளிநாட்டவரினால் பேணப்பட்ட Honda 400 CC Twin MB 100 விற்பனைக்குண்டு. நிதி உதவி ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். பார்வையிடவேண்டிய முகவரி.

**SHABRA**

207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
6249

## Jaffna College Prize - Giving

ON

**Thursday 10th March, 1983**

AT

**6-00 p.m.**

CHIEF GUESTS:
PROFESSOR JOHN WALTER BICKNELL
&
MRS. EVANGELINE BICKNELL.

Parents, Alumni and friends are cordially invited.

Jaffna College, Vaddukoddai. — A. KADIRGAMAR, Principal.

6232

## நினைவு அஞ்சலி

### வசந்தகுமார் இராசலிங்கம்

(அக்குவைனஸ் சர்வகலாசாலை கணக்கியல் மாணவன்)

| உலகில் உதித்த தினம்: | கந்தன் கழலடியில் தெய்வீகம் பெற்ற தினம்: |
| --- | --- |
| 2-4-1949 | 1-3-1973 |

காசிவிசாலாட்சி சமேத காசி விஸ்வநாதனால் ஆட்கொள்ளப்பட்டு இன்று நல்லூர் மால்மருகன் திருவடிகளில் இன்று பத்து ஆண்டுகள் நிறைவெய்தி மகிழும் எங்கள் உயிரே மைந்தா எங்கள் உணர்வே அண்ணா அருளொளி நிறைந்த நின் இதயத்தின் அமுத அன்பை அறிவொளி நிறைந்த கண்களால் காட்டி அள்ளிக் கொடுக்கும் நின் திருக்கரங்களால் எம்மை அணைத்து "நானே உங்கள் உலகம் நானே காப்பேன் என்பாயே!" இன்று கலங்கி நிற்கிறோம். காப்பாற்றி அருள்வாயப்பா.

உன்னையே நம்பி வாழும்

அப்பா, அம்மா, தங்கை வசந்தகுமாரி,
தங்கை வசந்தசரோஜினி, பெரியம்மா,
உறவினர்கள், நண்பர்கள்.

15/16, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். [6372]

# தீவிரவாத சீக்கியர் கோரிக்கை பிரதமர் இந்திரா ஏற்றுக்கொண்டார்

★ சீக்கிய மத கீதங்கள் ஒலிபரப்பு

★ மது, மாமிச விற்பனைத் தடை

★ விமானப் பயணத்தில் வாள் கொண்டுசெல்ல அனுமதி

புதுடில்லி பெப் 28

சீக்கிய தீவிரவாதிகளான அகாலிகள் விடுத்த கோரிக்கைகளில் சிலவற்றை பிரதம மந்திரி திருமதி. இந்திரா காந்தி ஏற்றுக் கொண்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப் மாநில முதலமைச்சர் திரு. தர்பாராசிங், பிரதமர் திருமதி காந்தி இவ்வாறு சில கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டுள்ளதையிட்டு மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். அத்துடன் சீக்கியர்கள் நிச்சயம் தமது கோரிக்கைகளை பிரதமர் ஏற்றுக்கொண்டதையிட்டு திருப்தியடைவார்கள் என்றும் கூறினார்.

திரு தர்பாராசிங் மேலும் தெரிவித்ததாவது: ''பிரதமர் திருமதி இந்திரா காந்தி எப்போதும் சீக்கிய இனத்தவர்கள் மீது அனுதாபம் கொண்டவராகவே இருந்து வருகிறார். சீக்கியர்களுக்கும் கிடைக்கும் சலுகைகளை அவர் ஒருபோதும் தடுத்ததில்லை'' என்றார்.

இதேவேளை தீவிரவாத அகாலிகளின் தலைவர், பிரதம மந்திரி இவ்வாறு தமது கோரிக்கைகளை ஏற்றது குறித்து பூரண திருப்தி தெரிவிக்கவில்லை. தமது கோரிக்கைகள் முற்று முழுதாக ஏற்றுக்கொள்ளப்படும் வரை தமது கிளர்ச்சிகள் நீடிக்கும் என்று கூறினார்.

பிரதமர் திருமதி இந்திரா காந்தி சீக்கியர்களின் கோரிக்கைகள் சிலவற்றை ஏற்றுக் கொண்டதையடுத்து, சீக்கிய மதப்பாடல்கள் நேரடியாக இந்திய வானொலியில் ஒலிபரப்பப் படவிருக்கின்றன. அமிர்தஸரஸில் சீக்கிய மதஸ்தலங்களுக்கருகில் மதுபானம் மாமிசம் என்பன விற்பனை செய்யத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இவற்றுடன், சீக்கியர்களின் பாரம்பரிய உடையில் ஓர் அம்சமாக இருக்கும் சிறிய வாளை விமானங்களில் செல்லும்போது அவர்கள் வைத்திருக்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. (கி)

## இன்று திருச்செந்தூர் இடைத்தேர்தல்!

(சென்னை)

திருச்செந்தூர் தொகுதியின் சட்டப்பேரவைக்கான இடைத்தேர்தல் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது. இடைத்தேர்தலில் ஒரு லட்சத்து 32 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களிக்கும் தகைமை பெற்றுள்ளனர்.

இந்திரா காங்கிரஸ்கட்சி, அ. தி. மு. க. கட்சி, தி. மு. க., ஜனதா கட்சி, காந்தி-காமராஜ் காங்கிரஸ் கட்சி வேட்பாளர்கள் உட்பட மொத்தம் 24 வேட்பாளர்கள் இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

அ. தி. மு. க. வின் சட்டப் பேரவையின் திருச்செந்தூர் தொகுதி உறுப்பினராக இருந்த கேசவ ஆதித்தனார் விபத்தில் மரணமானதையடுத்தே இந்த இடைத்தேர்தல் நடைபெறுகிறது. (உ)

## தென்னுபிரிக்காவில் இந்தியர் எதிர்ப்பு

புதுடில்லி, பெப். 23

தென்னுபிரிக்காவில் வாழும் இந்தியர்களது கல்விக்கான பொறுப்பை தென்னுபிரிக்க இந்திய கவுன்சிலின் மீது சுமத்த பிரெடோரியா அரசு எடுத்துள்ள முயற்சிகளுக்கு அந்நாட்டில் வாழும் பத்து லட்சம் இந்தியர்களும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

தென்னுபிரிக்க இந்திய கவுன்சில் ஆசிரியர்களுக்குப் பதவியுயர்வு அளிப்பது, இரண்டு இந்திய ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளுக்கான இயக்குனர்களை நியமிப்பது போன்ற விவகாரங்களில் தலையிட்டது குறித்து இங்கு இந்திய சமூகத்தினரிடையே கலவரங்கள் மூண்டுள்ளன என டர்பலிலிருந்து பிடிஐ செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது.

அறுபதுக்குமதிகமான இந்திய பொது ஸ்தாபனங்களும் தொழில் ஸ்தாபனங்களும், ஒன்றிணைந்து இந்திய சமூகத்தினரின் விவகாரங்களில் தலையிடும் எந்த முயற்சிகளையும் தடுக்க ஒரு கமிட்டியை நிறுவியுள்ளன.

தென்னுபிரிக்காவின் இந்திய காங்கிரசின் இந்த ஒன்றிணைப்புக் கமிட்டி அரசாங்கத்தின் இந்தப் போக்கை எதிர்த்து பெரும் பிரசார இயக்கத்தை நடாத்திவருகிறது. 6000 இந்திய ஆசிரியர்கள், டாக்டர்களைத் தன் அங்கத்தவர்களாகக் கொண்ட தென்னுபிரிக்க ஆசிரியர் சங்கம் இந்த இயக்கத்தை வழிநடத்தி வருகிறது. (கி)

## மேற்கிந்திய - இந்திய டெஸ்ட் பந்தயம் கைவிடப்பட்டது!

கிங்ஸ்டன், பெப். 28

மேற்கிந்திய – இந்திய கிரிக்கெட் டெஸ்ட் பந்தயம் கடும் மழை காரணமாக நேற்றுமுன்தினம் கைவிடப்பட்டது.

முதலாவது டெஸ்ட்டின் 4வது தினமே நேற்றையதினமாகும். கடந்த சனிக்கிழமை இரவு ஆரம்பித்த கடும்மழை தொடர்ந்து நேற்று நண்பகல் வரை பெய்தது. இதனால் மைதானம் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றது.

இந்தியா இந்த டெஸ்ட்டில் முதலாவது இன்னிங்ஸ் 251 ஓட்டங்களைப்பெற்றது. மே. இந்தியா 254 ஓட்டங்களைப் பெற்றது. இரண்டாவது இன்னிங்ஸில் இந்தியா 3 விக்கட்டுகள் நட்டத்துக்கு 81 ஓட்டங்களைப்பெற்றுள்ளது.

இரண்டாவது இன்னிங்ஸில் அமரநாத் மட்டுமே இதுவரை 40 ஓட்டங்களுடன் அதிக எண்ணிக்கையைப்பெற்ற வீரராக உள்ளார். வெங்கசாகர், யஸ்ப்பால்சர்மா ஆகியோர் முறையே 4, 6 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காது இருந்துவருகின்றனர். (கி)

## அணிசேரா மகாநாடு: இறுதிக்கட்ட ஆயத்தங்கள் துரிதமடைகின்றன!

புதுடில்லி பெப் 28

அணிசேரா மகாநாட்டுக்கான இறுதிக்கட்ட ஆயத்தங்கள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இந்தியப் பிரதிநிதிகளும், தற்போது புதுடில்லி வந்துள்ள வெளிநாட்டுப் பிரதிநிதிகள் சிலரும் இந்த ஆயத்தங்களைச் செய்து வருகின்றனர்.

அணிசேரா மகாநாட்டில் ஆராயப்படவிருக்கும் பொருளாதார, அரசியல் பிரச்னைகள் குறித்து இந்தியா அங்கத்துவ நாடுகளுக்கு ஏற்கனவே சுற்றறிக்கைகள் அனுப்பி வைத்திருந்திருந்தது.

இந்த சுற்றறிக்கைகளில் உள்ள விடயங்களையே தற்போது கூடியுள்ளவர்கள் விவாதித்து இறுதி முடிவுகளை மகாநாட்டில் சமர்ப்பிப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 7ந் திகதி ஆரம்பமாகவுள்ள 7வது அணிசேரா உச்சி மகாநாடு வெற்றிபெற அல்ஜீரிய ஜனாதிபதி, கியூபா உபஜனாதிபதி ஆகியோர் வாழ்த்துக்களை அனுப்பிவைத்துள்ளனர்.

அகில இந்திய இந்திரா காங்கிரஸ்கட்சி பொதுச்செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான திரு. ராஜீவ் காந்தி, மகாநாட்டுக்கு இந்திரா காங்கிரஸின் ஆதரவை வழங்கும் வகையில் அமைப்பொன்றையும் உருவாக்கியுள்ளார். அத்துடன் சர்வதேச ரீதியில் இம்மகாநாடு பதட்டத்தைத் தணிக்க உதவும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். [கி]

## மாணவிகளுக்கு றீகன் புத்திமதி!

வாஷிங்டன், பெப். 28

''மருந்து வில்லைகளை பெற்றோருடைய அனுமதியின்றி உட்கொள்ளக்கூடாது'' என்று ஜனாதிபதி ரொனல்ட் றீகன் வெள்ளைமாளிகையைப் பார்வையிட வந்த பாடசாலை மாணவிகளுக்கு புத்திமதி கூறினார்! அவர் மேலும் அவர்களிடம் கூறியதாவது:

''உங்களது நன்மை கருதியே சில நடவடிக்கைகளை நாம் எடுக்கிறோம். ஆனால் நாம் உங்கள் விவகாரங்களில் தலையிடுகிறோம் என்று ஆட்சேபனைக்குள்ளாகிறோம்.

சிறுபிள்ளைகள் விடும் தவறுகள் குறித்து பெற்றோர்களை எச்சரிக்கையாக இருக்கும்படி பணிப்பது எந்த வகையில் அவர்களது விவகாரங்களில் தலையிடுவதாக இருக்கமுடியும்?'' என்றார்.

திரு. றீகன் அமெரிக்கப் பாராளுமன்றத்தில், மாணவர்கள் கண்டபடி வில்லைகளை உட்கொள்வதற்கெதிரான பிரேரணை ஒன்றை ஆதரித்திருந்தார்.

அப் பிரேரணையில் மாணவர்களுக்கென அவர்களது கர்ப்பம் காரணமாக சிபார்சுசெய்யும் மருந்துவில்லைகளை அவர்களது பெற்றோர்களுக்கும் சகல வைத்திய நிலையங்களும் அறியப்படுத்தவேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது!

அண்மைக்காலங்களில் மாணவர்கள் அமெரிக்காவில் பெருமளவில் போதைவஸ்துகளுக்கும், கண்மூடித்தனமாக மருந்துவில்லைகளுக்கும் அடிமையாகிவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. [கி]

## அமெரிக்க யுத்த விமானங்கள்

கராச்சி, பெப் 28

முதல் 'எப்-16' போர் விமானங்களை பாகிஸ்தானுக்கு அமெரிக்கா கையளிக்கும்வைபவம் ஸர்கோதா விமானத்தளத்தில் நடைபெற்றது. மிகுதி விமானங்கள் விரைவில் வரவுள்ளன

விமானங்களை பராமரித்து பாதுகாப்பதற்கான அமெரிக்க ராணுவக் குழுவினரும் இங்கு வந்திருந்தனர்.

பாகிஸ்தானுக்கு மொத்தம் 'எப்-16' போர் விமானங்கள் நாற்பதை பாகிஸ்தான்-அமெரிக்க ஒப்பந்தத்தின் கீழ்வாஷிங்டன் வழங்கவுள்ளது. 14புதிய ராணுவ விமான நிலையங்களின் புனர் நிர்மாணவேலைகள் நடைபெற்று வருகின்றன. போர் விமானங்களுக்கான புதிய 13 நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

பத்திருகை செய்திகளின்படி மொத்தம் 2,500 அமெரிக்கப் படை வீரர்கள் பாகிஸ்தான் விமானத் தளங்களில் நிறுத்தப்படுவர்.

## "இலங்கை - சோவியத் நட்புறவு பலமானது"

### மாஸ்கோவில் பிரதி அமைச்சர்

மாஸ்கோ, பெப். 28

இலங்கையின் உதவி ராஜாங்க அமைச்சர் சந்திரா கருணாரத்னவின் தலைமையில் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்துள்ள இலங்கை-சோவியத் நட்புறவுக் கழகத்தின் குழு ஒன்று இங்கு நடைபெற்ற சோவியத்-இலங்கை நட்புறவுச் வாரக் கொண்டாட்டங்களில் கலந்துகொண்டது.

கொண்டாட்ட நிகழ்ச்சிகளின் போது, மாஸ்கோவில் உள்ள லெனின் தேயிலை பொதி செய்யும் ஆலைக்கும் இக்குழுவினர் விஜயம் செய்தனர்.

இவர்களை வரவேற்றுப் பேசிய, தொழிற்சாலையின் இயக்குனர் விக்டர் யூகொபினேவ், சோவியத் மக்களுக்கும் இலங்கை மக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெறும் ஒவ்வொரு சந்திப்பும் சோவியத்-இலங்கை மக்களுக்கிடையிலான நட்புறவையும் பரஸ்பர நல்விளக்கத்தையும் மேலும் உறுதிப்படுத்துவதை நோக்கி எடுத்து வைக்கப்படும் ஒவ்வொரு அடியாகும், என்றார்.

இத்தொழிற்சாலையின் ஊழியர்கள் அனைவரின் சார்பில் இலங்கை அதிதிகளுக்கு அவர்களது 36வது சுதந்திர தினத்தை ஒட்டி தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார். இலங்கையுடனான நட்புறவை வளர்ப்பதில் இத்தொழிற்சாலை ஊழியர்கள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளையும் அவர் விளக்கினார்.

இலங்கையின் துணை ராஜாங்க அமைச்சரான சந்திரா கருணாரத்ன தமதுரையில் ''இதுதான் எனது முதலாவது சோவியத் விஜயம். உங்கள் நாட்டில் நான் பார்த்த ஒவ்வொன்றும் என்னிடத்தில் பெரும் மனப்பதிவை ஏற்படுத்தியுள்ளது, குறிப்பாக சோவியத் யூனியனின் பொருளாதார, கலாசார சாதனைகளைக் குறிப்பிடலாம்'' என்றார்.

## குடும்பசெபமாலை தியானம்

(கரவெட்டி)

கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயப் பங்கில் மீண்டும் குடும்பச்செபமாலைத் தியானம் ஆரம்பமாகியுள்ளது. நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் ஆரம்பமாகியுள்ள இக் குடும்பச்செபமாலைத்தியானம் வாரத்தில் ஒரு நாள் மட்டும் நடைபெற்று வருகிறது.

## அஸாமில் இந்திரா காங்கிரஸ் பதவியேற்றது!

புதுடில்லி, பெப். 28

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அஸாமில் இந்திரா காங்கிரஸ் கட்சி நேற்று முன்தினம் ஆளுங்கட்சியாகப் பதவியேற்றது.

இந்த மாநிலத்தில் கடந்த ஒருமாத காலமாக நடைபெற்ற பெரும் தேர்தல் வன்முறைகளையடுத்து கடந்த வாரம் இடம்பெற்ற தேர்தலில் இந்திராகாங்கிரஸ் அதி பெரும்பான்மையுடன் இம்மாநிலத்தில் ஆட்சியைக் கைப்பற்றியது.

சுமார் 2500 பேர்வரை அஸாம் மாநில வன்முறைகளால் உயிரிழந்துள்ளார்கள் என்று ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன. இறந்தவர்களில் அநேகமானோர் வங்காளிகளே என்பது குறிப்பிடத்தக்கது. பங்களாதேஷில் இருந்து அகதிகளாக அஸாமினுள் புகுந்த இவர்களை தீவிரவாத அஸாம் இளைஞர்கள் கொலைசெய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு பயங்கரமான முறையில் டலர் கொலைசெய்யப்பட்டதையடுத்து அஸாமிலிருந்து வங்காளிகள் அயல் மாநிலமான அருணாசல பிரதேசத்துக்குள் நுழைய ஆரம்பித்துள்ளனர். காடுகள் வழியாகவும், ஏனைய மறைவிடங்கள் வழியாகவும் இவர்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிக்கும் பணிகளும் மும்மரமாக இடம்பெறுகின்றன. அஸாமில் கடுமழை தற்போது பெய்து வருவதால் இப்பணிகள் பாதிப்படைகின்றனவென்றும் தெரிவிக்கப்பட்டது. (கி)

**மணிவாக்கு**

நன்றே தரினும் நடுவு இகந்து
ஆம் ஆக்கத்தை
அன்றே ஒழியவிடல்
—குறள்

# நமது நோக்கு

## நிதி மந்திரிகளின் இக்கட்டானவாழ்வு

ஜனநாயக ஆட்சியில் சுதந்திரம் உயிர் வாழ்வதென்றால் உண்மைச்செய்திகள் மக்கள் கைக்கெட்ட வேண்டும். சர்வதேச செய்தி ஸ்தாபனங்களே இன்று தடம்புரளுகின்றன.

ஐ நா. போன்ற சர்வதேச நிறுவனங்கள் வடித்தெடுக்கும் தகவல்கள் அப்பாரிய ஸ்தாபனத்தில் பணிபுரியும் சிவில் சேவிஸ் உயர் உத்தியோகத்தர்கள், குறிப்பிட்ட நாட்டைப்பற்றி அந்நாட்டின் உயர்மட்ட அதிகாரிகள் அளிக்கும் விளக்கமே! அந்த நாட்டின் அரசியல், சமுதாய பிரச்னைகளைப் பற்றிய படம் பெரும்பாலும் அங்கு உயர் பதவி வகிக்கும் அரசியல் தொழில் நுட்ப நிபுணர்களின் கருத்தாகவே காணப்படுகிறது. பொதுமக்கள் அபிலாஷைகள் அவற்றில் ஊற இடமிராது.

எனவே எந்த நாட்டினதும் உண்மை நிலை—விருத்தி யடைந்த நாடென்ருலென்ன எங்கள் நாட்டைப் போன்ற வறிய நாடென்ருலென்ன—இவ்வித மேல்மட்ட தொடர்புகளிதால் உலகின் கவனத்துக்கு வருவதில்லை.

ஆசிய நாடுகளின் பொருளாதார அவல நிலைக்கு இன்றைய சாதனங்கள் வெகுஜன தொடர்புசாதனங்களே! பத்திரிகை, வானொலி, ரீ. வி. போன்றவை.

மேற்கத்திய நாடுகளுக்கு இவ்வித ஆபத்து ஏற்பட்ட காலத்தில், உலகப் பிரசித்தி பெற்ற அரசியல் பொருளாதார நிபுணர் ஹரல்ட் லஸ்கி (Harold Laski) விடுத்த எச்சரிக்கை எங்கள் நாட்டுக்கு இன்றைய கட்டத்தில் மிகப்பொருத்தமாகிறது.

அது என்ன? இக்கட்டான காலத்தில் வாழ்க்கையின் தொல்லைகள் தாங்கொணுச் சமயத்தில் அவற்றை மறக்க வைக்கும் அவசிய கருவிகளாகவே இன்றைய பத்திரிகைகள், சினிமா, ரீ. வி. பணிபுரிகின்றன; பத்திரிகைகளைப் புரட்டி ஆபாச கதைகளையும், படங்களையும், விளையாட்டு வீரரின் 'அற்புத சாதனைகளையும் பார்த்தல், சினிமாப்படங்களில் சிற்றின்பக்காட்சிகளை ரசித்தல் ரீ வி சொல்லவேண்டுமா - இவை யாவும் சங்கடமான சிந்தனைகளிலிருந்து எம்மைக் காப்பாற்றுகின்றன. போலித் தேவைகளை, வெறும் ஆடம்பரங்களை நாடச்செய்கின்றன.

அறிஞர் லஸ்கியின் அறிவுரைக்கும் இன்று எம் நாட்டில் நடமாடும்போலிச்செல்வத்துக்கும் தொடர்புண்டு; எங்கள் நாடு மட்டுமல்ல உலகில் அடிமை வாழ்வில் இருந்த வறிய ஆசியநாடுகள் பலவற்றில்பசியால் உயிரிழக்கும் நிலைக்கு 75 கோடி மக்கள் இந்தப் பிராந்தியத்தில் தள்ளப்பட்டுவருகின்றனர்; பாண் விலையேறினுல் 'கேக்' சாப்பிடுவதுதானே என்று ரீ வி சொல்லக்கூடும்.

இந்த நிலையில் எங்கள் நிதியமைச்சர், இன்றைய உலகில் நிதிமந்திரிகளின் அரசியல் வாழ்வு மிகக் கவலைக்குரியதென்று ஒரே' மையில்பிரஸ்தாபித்து தமது சகாக்கள் எல்லோருக்கும் பூச்சிட்டிருக்கிருர். தப்ப வழி தேவையாதலால் இதுவும் ஒரு வழி! ஆனுல் எங்கள் நாட்டைக் குறிப்பிட்டுப் பார்க்கில் நிதி அமைச்சரின் பாராளுமன்ற ஆசனமே பரபரப்பேற்படுத்தியிருந்தது.

அந்த ஞானஸ்நான நெருப்பைத் தாண்டிய நிதி அமைச்சர் தாம் சூடுகண்ட பூனை என்றும், ஆனுல் தமக்கு மீண்டும் அடுப்படியை நாடும் சக்தி உண்டென்றும் நம்பிக்கை உரை நிகழ்த்தி வருகிருர். அது அவருடைய புதிய தொகுதியின் ஆதரவைத் தேடும் நோக்கமாகவிருக்கலாம்.

நாட்டை வரவுசெலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையிலிருந்து காப்பாற்றுவது எப்படி? நிதி அமைச்சர் வெளிநாட்டு நிதிஉதவியில் தொடர்வதானுல் அது 'பிச்சை கேட்கும் தொழிலென்பதில் அவர் வெறுப்படைந்திருக்கிருர்; அது சாத்தியமானதுமல்ல.

மக்களே இதற்கு மருந்து காண வேண்டும்; அந்த மருந்து நிதி அமைச்சருக்கும் ஆரோக்கியம் அளிக்க வேண்டும். இதென்ன ஆச்சரியமென்று வாசகர் முணுமுணுப்பது இயல்பு.

கடந்த ஆட்சியில் உள்ளூர்த் தொழில், விவசாய அபிவிருத்தியின் பெயரில் வெளிநாட்டு இறக்குமதி எதுவும் இன்றிக் காய்ந்த 'மாடுகள்' இன்று நாட்டில் குவியும் பொருள்களைக் கண்டு — பெரும்பாலும் ஆடம்பரப் பொருள்கள் — கம்பில் விழுந்தது போல் பாவனையாளர்களென்ற பாவனையில் நன்ருக நுகர்கின்றனர்; பணம், பெரும்பாலும் வெளிநாட்டுப் பணம் படைத்தவர்.

உள்ளூர்க் கைத்தொழில் விவசாயம் மற்றைய துறைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள பாவனையாளர்களின் ஆசைப் பொருட்களை வர்ணிக்கும் ஒருவெளிநாட்டுப் பத்திரிகை இலங்கைக்கு—பழவகைகள், 'பட்டர் நியுசிலந்திலிருந்து' — தரமான சீஸ் சுவிற்சலாந்திலிருந்து எல்லாவிதமான எலெக்ரோனிக் யந்திரங்கள், ஜவுளி வாகனுதிகள்—எங்கிருந்தும் இறக்குமதி செய்தால் அவை யாவும் ஒரு கணத்தில் விலையாகின்றன என்று பரிகாசமாக எழுதுகின்றது; வெளிநாட்டு இறக்குமதியில் உருகிகண்ட பிறவிகள்.

உல்லாசப் பயணிகளிலும் அவர்களுடைய நெறி தவறிய பழக்கங்களாலகிடைக்கும் செல்வத்தையும் நம்பியிருக்கும் நாடு பௌத்த மதத்தின் மகத்தான பண்புக்கு சாவுமணியடிக்கிறது. நிதி மட்டுமல்ல தெய்வ நீதியும் நிராகரிக்கப்படுகிறது.

எனவே நட்டை, நாட்டின் நிதி நிலையை உயர்த்தி வைப்பதற்கு பெரும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அதனை அடகு வைத்தல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

எங்கள் எல்லோருக்கும் மேல் ஒரு இறைவன் இருக்கிருன் என்ற நம்பிக்கையில் ஆட்சித் தலைவர் அவனுக்கு அடிபணிந்து தாமும் தம் சகாக்களும் மக்கள் கடனற்று, சுய உதவியால் தங்கள் ஊதியத்தைபெற வழி காட்ட முடியுமானுல் யாரும் நிதி அமைச்சராகலாம்; இக்கட்டான வாழ்வுக்கு இரையாக வேண்டியதில்லை.

# பனையில் சுரக்கும் 'நீரா' ஒரு அற்புத சஞ்சீவி!

## 'சீவல் தொழிலாளி' எனும் பெயர் 'பனைத்தொழில் வல்லுநரா'க வேண்டும்

### நிபுணர் சம்பந்தத்துடன் ஒரு சந்திப்பு

- பா. அனந்தகிருஷ்ணன் -

"பனை சுரப்பது ஒரு அற்புதமான பானம். ஆனுல் ஏனே தெரியவில்லை எழுத்தாளர்களும் பாடலாசிரியர்களும் அந்தப்பானத்தை 'கள்ளு' என்று அர்த்தமற்ற விதத்தில் அழைக்கிருர்கள்" என்று தமிழ்நாடு பனம் பொருள் நிபுணர் திரு. கே. சம்பந்தம் கவலை தெரிவித்தார்.

பனைவள மகாநாடு சம்பந்தமாக யாழ்ப்பாணம் வந்திருந்த அவரை நான் சந்தித்த போது பனைபற்றியும் அதன் பயன்பாடுகள் பற்றியும் அவர் கொடுத்தவிளக்கங்கள் அவரை ஒரு பனையின் புதல்வனுகவே கருதச் செய்தது.

### பனை நீரா

"பனை சுரக்கும் பானத்தை 'நீரா' என்றழைப்பதே தமிழக வழக்கம். அந்த 'நீரா' என்ற பெயர் காந்தி அண்ணலினுலேயே வழங்கப்பட்டதொன்று. எனவே நீராவின் பயனை அறியாதவர்களே அதற்கு 'கள்ளு' என்று பெயர் தொடர்ந்திருக்க வழி செய்கிருர்கள். ஆனுல் பனை நீரா போதைதருவதல்ல! போஷாக்கைக் கொடுப்பது களைப்பகற்றுவது! இனிமை தருவது! என்று பனையின் பயன்பற்றி சிறுவியாக்கியானத்துடன் தனது கருத்துக்களை திரு சம்பந்தம் வெளியிட ஆரம்பித்தார்.

"பனை நீராவின் பயன்பாடு பற்றி விரிவாகக் கூறுவீர்களா?

"பனம் பொருள் அபிவிருத்திச்சபை மகாநாட்டில் மூன்றுடாக்டர்களின் கட்டுரைகளை நான் சமர்ப்பித்தேன். அந்த மூன்றினதும் உள்ளடக்கங்களை சுருக்கமாகக் கூறுகிறேன் என்று அக்கட்டுரைகள் பற்றி சுருக்கமாக விளக்கலானர்.

### கண்நோய் நிவாரணி

"முதலாவது கட்டுரை மதுரை டாக்டர் வெங்கடசாமியுடையது. இவர் ஒரு சர்வதேசரீதியில் புகழ்பெற்ற கண் டாக்டர் குருட்டுத் தன்மையை அகற்றுதல் என்ற பொருளில் ஹைதராபாத்தில் நடந்த கண் டாக்டர்கள் கருத்தரங் கொன்றில் இவர் பங்கு கொண்டு 'பனைநீரா'வால் கண்வியாதிகளைக் குணப்படுத்துவது பற்றி தமது கருத்துக்களை வெளியிட்டார். அக்கருத்துகளுக்கு ஆதாரமாக தமது ஆராய்ச்சிகள் சிலவற்றையும் அவர் குறிப்பிட்டார் இவ்வாறு அவர் தெரிவித்தவை கருத்தரங்கில் கலந்துகொண்டோரை பிரமிக்கச் செய்தது. பின்னர் பலர் அவரின் 'நீரா' சிகிச்சை முறை பற்றி அறிந்து கொள்வதிலும் ஆர்வங்காட்டலானுர்கள்.

### எடையைக் கூட்டுவது

இரண்டாவது கட்டுரை டாக்டர் பான்ஸே என்பவருடையது இவர் பூனுவைச் சேர்ந்தவர் 'பனை நீராவைப் பருகுவதால் சிறுபிள்ளைகளின் எடை கூடுகிறது என்பது இவர் கருத்து. தமது ஆராய்ச்சியில் பிள்ளைகள் சிலருக்கு ஆறுமாதங்கள் தொடர்ச்சியாக இவர் பதநீர் கொடுத்துள்ளார்.

விளைவு? அவர்களின் எடை எட்டு இருத்தல்களால் அதிகரித்திருந்தது இதனைத் தொடர்ந்து 'பனைநீரா' தேகபலத்தையும், எடையையும் கூட்டுகிறது என்ற கருத்து வலுப்பெற்றது.

குறிப்பிடத்தக்க அம்சமென்னவெனில் பான்ஸேக்கு டாக்டர் பட்டம் வாங்கித்தந்தது நீரா பற்றி அவர் எழுதிய இக்கட்டுரையே

### நெஞ்சு வியாதிக்கும் கர்பவதிகளுக்கும்...

மூன்ருவது; நாகர்கோவிலைச் சேர்ந்த டாக்டர் ஹிங்கையா உடையது. நெஞ்சு வீக்கத் (Rickets) துக்கு 'பனை நீரா' அருமருந்து எனபது அவர் கருத்து. கூடவே 'கர்ப்பவதிகளுக்கும், குழந்தைகளைப் பிரசவிக்க நிலையிலுள்ள தாய்மார்களுக்கும் 'பனைநீரா' போஷாக்கைக் கொடுப்பதுடன், மேலதிக இரத்தப் போக்கையும் தடுக்கிறது" என்ருர்.

### தமிழகத்தில் பனைவளம்

"தமிழகத்தில் பனைவளம் பற்றியும், அங்கு உங்கள் நடவடிக்கைகள் பற்றியும் கூறுவீர்களா"?

"இந்தியாவில் 9 கோடி பனைமரங்கள் உண்டு. இவற்றில் 5 கோடி தமிழகத்தில் உண்டு. தமிழகத்தில் எனது மேற்பார்வையில் பல பனைவள திட்டங்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன சுமார் 3லட்சத்து 30 ஆயிரம் பேர் எமது பனம் பொருள் அபிவிருத்தித் திட்டத்தில் பணிபுரிகிருர்கள். இவர்களில் 70 சதவீதமானவர்கள் பெண்கள். மிகுதி 50 சதவிதமானவர்களே ஆண்கள். மரமேறும் பணி மட்டும் ஆண்களுடையது. மற்றவையெல்லாம் பெண்கள் வேலை

ஆறு பயிற்சி நிலையங்களை நடத்துகிறேம். ஒவ்வொன்றிலும் 30 பேருக்கு பயிற்சி வழங்கப்படுகிறது. இவற்றுடன் 1600 கூட்டுறவுச் சங்கங்களையும் வைத்துள்ளோம்.

"இவை பயிற்சி நிலையங்களிலிருந்து வெளியேறுபவர்களுக்கு கடன் வசதி வழங்கி பனம் பொருள் உற்பத்தியை ஊக்குவிக்கின்றன. பின்னர் அவர்களது உற்பத்திகளை வாங்கி நல்ல சந்தை வாய்ப்புகளையும் அவர்களுக்கு வழங்குகின்றன. எமது திட்டங்களுக்கு 50 வீதம் மத்திய அரசும், 50 வீதம் மாநில அரசும் உதவி வழங்குகின்றன" என்ருர்.

### அரசின் சவால்

திரு. சம்பந்தம் தனக்கு அரசுவிட்ட ஒரு சவாலையும் தாம் அச்சவாலை ஏற்று வெற்றிபெற்ற விதத்தையும் கூறியபோது வியப்பாக இருந்தது

"அரசிடம் ஒரு தடவை 3 லட்சம் ரூபா நிதியுதவி கோரியிருந்தேன். 100 பேர்களுக்கு வேலை வழங்கினுலே அத்தொகைதரப்படுமென சவால் விடப்பட்டது. ஏற்றுக்கொண்டேன். சென்னையில் பனைநீரா பானங்கள் (Palmcola விற்பனை நிலையங்கள் 120 தொடக்கினேன், ஒவ்வொன்றுக்கும் ஒருவராக 120 பேருக்கு வேலை வழங்கினேன், உடனே கேட்ட தொகையும் கிடைத்தது,

அத்தொகையைக் கொண்டு 'பனை நீரா' வை பைகளில் அடைக்கும் இயந்திரமொன்றைப்பெற்றேன் (Prepak Machine) அதில் சுகாதாரமாகவும், சுகாதாரமாகவும் பனைநீராவைத் தயாரிக்கமுடிகிறது" என்ருர்,

### வெளிநாட்டு வருமானம்

உங்கள் பனம் பொருள் உற்பத்திகளை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கிறீர்களா?

"30 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறேம். தமிழகத்தின் எமது ஏற்றுமதியே முதல்தரமானது. வருடம் 250 லட்சம் ரூபா வருமானமாகக் கிடைக்கிறது. அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் ஆகியன எமது பிரதான இறக்குமதியாளர்கள்" என்ருர்.

"பனைமரத் தொழிலாளருக்கு நீங்கள் வழங்கிவரும் வசதிகள் என்ன?,'

### பொருளியல் நிலை காத்திரம் சமூகநிலை உயர்கிறது

"பனைமரத்தில் ஏறுபவர்களை மரமேறி என்றே அங்கு அழைப்பார்கள். இங்கு சீவல் தொழிலாளி என்கிருர்கள். ஆனுல் நாம் அவர்களுக்குப் 'பனைத் தொழில் வல்லுநர்' என்ற பெயரை வைத்துள்ளோம். இப்பெயர் அவர்களைக் குறைவாக எடைபோடும் சமூகத்தினர்களை உயர்வாக எடைபோடச் செய்கின்றனர்! இத்துடன் அவர்களுக்கெனச் சீருடையும் தயாரித்துள்ளோம். அந்த உடை ஒரு சாரணனின் உடையை ஒத்தது! கூடவே மரமேறுபவர்களின் பாதுகாப்புக்கென மரங்களில் ஏணிகளையும் அமைத்துள்ளோம். இந்த ஏணிகள் பாதுகாப்பை வழங்கும் அதே சமயம் இதுவரை மரம் ஏருதவர்களையும் ஏறத் தூண்டுகின்றன" என்ருர்,

### இலங்கை ஒருபடி உயர்ந்துள்ளது!

இறுதியாக திரு. சம்பந்தம்

(5-ம் பக்கம் பார்க்க)

தவக்கால நற்சிந்தனை



### ஏற்றுக் கொள்வோம்

"மனுமகன் பொருட்டு மனிதர் உங்களை வெறுத்து புறம்பாக்கி வசை கூறி, உங்கள் பெயர் ஆகாது என்று இகழ்ந்து ஒதுக்கும்போது நீங்கள் பேறுபெற்றவர்கள் வானகத்தில் உங்கள் கைமாறு மிகுதியாகும்" இவ்வுலகில் நடக்கும் ஒவ்வோர் செயலும் உமது சித்தப்படியே நடக்கிறது. நாம் சந்திக்கும் ஒவ்வொரு செயலிலும் உமது சித்தத்தை ஏற்கவும், அதன்படியே வாழவும், வான்வீட்டிற்கு எப்போதும் எம்மைத் தயார் நிலையில் வைத்திருக்கவும் உதவியருளும்.

அருட்செல்வன் ம. ரூபன்

# அரசபதவி வெற்றிடங்கள்

## உதவிப் பணிப்பாளர்

கடற்றொழில் அமைச்சின் உதவிப்பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி வர்த்தகம், புள்ளிவிபரவியல், பொருளாதாரம், கணக்கியல், கடலக உயிரியல் / விலங்கியல் ஆகியவற்றில் பட்டம் பெற்றிருத்தல் அல்லது [1] ஆகு செலவு முகாமைக் கணக்காளர் நிறுவனம், [2] பட்டயக் கணக்காளர் நிறுவகம்-லண்டன், [3] பட்டயக் கணக்காளர் நிறுவகம்-இலங்கை ஆகியவற்றில் அங்கத்தவராக இருத்தல்வேண்டும். கடற்றொழில் முகாமை, நிர்வாகம் என்பனவற்றில் அனுபவம்உள்ளவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். வயதெல்லை 25 தொடக்கம் 45 வயதுவரை விண்ணப்பிக்க கடைசித்திகதி மார்ச் 14ம் திகதி. விபரங்களுக்கு பெப்ரவரி 18ம் திகதி வர்த்தமானி பார்க்கவும்.

## கட்டட மேற்பார்வையாளர்

நிலஅளவைத் திணைக்களத்தில் கட்டட மேற்பார்வையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் இலங்கை ஆண் பிரஜைகளிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி க. பொ. த. [சாதாரண] பரீட்சையில் ஒருதடவைக்கு மேற்படாது தோற்றி 6 பாடங்களில்,சித்திபெற்றிருப்பதுடன் சிங்களம், தமிழ் பேசக்கூடியவராகவும் இருக்கவேண்டும். அத்துடன் கனிஷ்டதொழில் கல்லூரியில் 3 வருட கட்டட நிர்மாண பயிற்சி நெறியில் சித்திபெற்றிருக்கவேண்டும். வயதெல்லை: 18 தொடக்கம் 40 வயதுவரையாகும். விண்ணப்பிக்க கடைசித் திகதி மார்ச் 16. விபரங்களுக்கு பெப்ரவரி 18ம் திகதி வர்த்தமானி பார்க்கவும்.

## ரூபவாஹினியில் இன்று

மாலை 6-00 இன்றைய நிகழ்ச்சிகள்.

6-01 சிறப்பு நிகழ்ச்சி (சிங்களம்)

6-30 'எலெக்றிக் கம்பனி'

7-00 செய்திமஞ்சரி தமிழ்

7- 4 நாளைய நிகழ்ச்சிகள்.

7-15 விளையாட்டுப் பயிசித்திட்டம் (உயரப்பாய்தல்)

7-30 இன்றைய சம்பவங்கள் பற்றிய அறிக்கை.

8-15 செய்தி மஞ்சரி (சிங்களம்)

8-29 நாளைய நிகழ்ச்சிகள்.

8-30 சினிமா சித்திரம் — குறைந்த நேர திரைப்படம்.

9-00 வெளிநாட்டு விமர்சனம்.

9-15 'எப். ஏ' வெள்ளிக்கிண்ண — 1983 (உதைபந்தாட்டம்)

9-30 செய்தி மஞ்சரி (ஆங்கிலம்)

9-45 'எப். ஏ' வெள்ளிக்கிண்ண உதைபந்தாட்டம். (தொடர்ச்சி)

## பணக்கஷ்டத்தினால் ஒப்பந்தக்காரர் தற்கொலை

(மட்டுவில்)

பெரிய கட்டிட ஒப்பந்தக்காரர் பொங்கல் செய்வதற்கு போதிய பணம் இல்லாத அளவுக்கு கடனாளியாகிவிட்டார். பொங்கலுக்காக அவரிடமிருந்த பணத்தை மனைவியிடம் கொடுத்தார். அது போதாததால் கணவன் மனைவிக்கிடையில் வாக்குவாதம் ஏற்பட்டதைத் தொடர்ந்து விரக்தியடைந்த ஒப்பந்தக்காரர், கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்டார். மரண விசாரணையில் இத்தகவல் வெளியானது.

இப்பரிதாப சம்பவம் சாவகச்சேரிப் பொலிஸ் பகுதியை சேர்ந்த நுணுவிலில் நடைபெற்றது. சி.இரத்தினம் என்ற ஒப்பந்தக்காரரே இப்படித்தற்கொலை செய்து கொண்டவராவார்.

சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு என். தர்மேந்திரன் மரணவிசாரணை நடத்தினார். சாவகச்சேரிப் பொலிஸ்சார்ஜன்ட் திரு எஸ். கந்தையா சாட்சிகளை ஆஜர் செய்தார். இறந்தவரின் மனைவி,மகள் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## பனையில்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

தனது பேட்டியை நிறைவு செய்யும் வேளையில் நடந்து முடிந்த 'பனம் பொருள் மகாநாடு' பற்றிக் கேட்டேன்.

"பனைவளம், அபிவிருத்தி ஆகியன தமிழகத்திலேயே மேம்பட்டுள்ளன, ஆயினும் பனையின் பயனை உலகறியச் செய்யும் விதத்தில் இலங்கை இம்மகாநாட்டை நடத்தித் தனது நிலையை ஒருபடி உயர்த்தியுள்ளது" என்று பெருமைப் பட்டுக்கொண்டார்,

வாகன வீதி ஒழுங்குகளைக் கவனிக்க

# விசேட ஊழியர்களை யாழ். மாநகர சபை நியமிக்கவேண்டும்

## சபையில் உறுப்பினர் கோரிக்கை

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை விசேட ஊழியர்களை நியமித்து யாழ் நகரில் வாகன வீதிஒழுங்குகளை கவனிக்க ஏற்பாடு செய்யவேண்டும். என்று சபை உறுப்பினர் திரு குகிறில் யாழ். மாநகரசபை கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்தார்.

இதற்கு பதிலளித்த மாநகர சபை முதல்வர் திரு இராஜா விஸ்வநாதன் ஒருமாநாடு கூட்டவிருப்பதாகவும் அதில் வாகனப்பிரச்சனை உட்பட பல விஷயங்கள் ஆலோசிக்கப்படவிருப்பதாகவும் கூறினார்.

யாழ். மாநகரசபையின் கூட்டம், முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது

அங்காடி வியாபாரிகள் தொடர்பான பிரேரணைமீது பேசுகையில் திரு குகிறில் மேலும் கூறியதாவது:

### உயிரைக் கையில்...

யாழ். நகரில் வாகனங்களினதும், பொதுமக்களினதும் நடமாட்டம் வேகமாகப் பெருகியுள்ளதால், பாடசாலைப்பிள்ளைகளும், மற்றும் பிரயாணம் செய்பவர்களும் உயிரைக்கையில் பிடித்துக்கொண்டுசெல்ல வேண்டிய பயங்கரமான சூழ்நிலை உருவாகியுள்ளது.

### மாணவி உயிர்ப்பலி

"அண்மையில் வாகனங்களின் அதிவேகப் பிரயாணத்தால், மாணவி ஒருவர் உயிர்ப் பலியாகியுள்ளார் தினசரி யாழ் நகரில் பிரயாணிகளின தும், வாகனங்களினதும் போக்குவரத்து நெருக்கடியால் விபத்துக்கள் ஏற்படுகின்றன இதனால் இங்கு சன நடமாட்டம் குறையுமோ என்ற ஐயப்பாடு தோன்றுகிறது.

### சாக்கடைகள் துர்நாற்றம்

சாக்கடைகளிலும், குளங்களிலும் நீர்தேங்கிநிற்பதால் துர்நாற்றம் வீசுவதுடன் நுளம்பு உற்பத்திக்கும் இடமளிக்கிறது

துர்நடத்தையில் ஈடுபடுவோர் தொகையும் இங்கு பெருகிக்கொண்டு போவதால் அதை ஒழித்துக்கட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

### முதல்வர் பதில்

முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் இதற்குப் பதிலளிக்கையில், ஜனநெருக்கடி பெரியகடைப்பிரசனை சுகாதாரம் சம்பந்தமாகத் தீர்வுகாண்பதற்கு, ஒருமகாநாடு கூட்டப் போவதாகவும், இம்மகாநாட்டில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், எம்பிக்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு ஆசோசனை வழங்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்

கீழ்காணும் தீர்மானம் நிறைவேறியது:

யாழ். நகரில் அங்காடிவியாபாரிகளுக்கு திறந்த வெளி அரங்கு வீதியிலும், அமரர் திருச்செல்வத்தின் சிலைக்கு அருகாமையிலும் இடம் ஒதுக்குவதென சபை தீர்மானிக்கிறது

இப்பொழுது முன்னேற்பாடாகத் தற்காலிக கொட்டில் போட்டுக் கொடுப்பதெனவும் சபை தீர்மானிக்கிறது.

### தொலைக்காட்சிப் பெட்டிக்கு நடந்ததென்ன?


யாழ் சுப்பிரமணியம் பூங்காவில் பொதுமக்களின் பாவனைக்கு வைக்கப்பட்டிருந்த தொலைக்காட்சிப் பெட்டிக்கு என்ன கதி நேர்ந்தது? என்று உறுப்பினர் திரு க நீ. ஆசீர்வாதம், கேட்டதற்கு அடுத்த கூட்டத்தில் இதற்குப் பதில் தரப்படும் என்று முதல்வர் சொன்னார்.

### திரிபோஷா கடத்தல்?

நெடுங்குளம், வண்ணார் பண்ணை ஆகிய இரு இடங்களிலுள்ள மருத்துவ மனைகளில் வழங்கப்படும் போஷாக்குணவான 'திரிபோஷா'மாவு, அங்குள்ள ஊழியர்களால் கடத்தப்பட்டது குறித்து கண்டனம் தெரிவித்த திரு. தப்பு கந்தையா இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டார்.

[8ம் பக்கம் பார்க்க]


# மீண்டும் கிடைக்கின்றது




# ஜப்பானிய பம்ப் தெழில் நுட்பமும் அமெரிக்க என்ஜினும்.

"டொக்காய்" தன்இயக்க விவசாய நீர் இறைக்கும் இயந்திரம் "பிறிக்ஸ் & ஸ்ரற்றன்" என்ஜினுடன் இணைக்கப்பட்டு இப்போது ரூ. 5200/-க்கு கிடைக்கின்றது.

- ★ நீர் இறைக்கும் அளவு மணிக்கு 27000 லீட்டர் (6000 கலன்)
- ✱ மண்ணெண்ணெய் கொள்வனவு மணிக்கு 0.75 லீட்டர் (0.16 கலன்)
- ✱ மொத்த நிறை 28 கிலோ (61 றாத்தல்)
- ✱ ஒரு வருட உத்தரவாதமும் நாடெங்கிலும் உதிரிப்பாகங்களும் கிடைக்கும்.

பொறியியல் விற்பனை, சேவைப் பிரிவு

HAYLEYS

ஹேலீஸ் லிமிட்டெட்

25, ஃபொஸ்டர் ஒழுங்கை கொழும்பு 10. தொலைபேசி 91181

எமது யாழ். மாவட்ட ஏக விற்பனையாளர்:

கல்யாணி ஸ்ரோர்ஸ் 31 நியூ மார்க்கட், சுன்னாகம்.

Mel Ads



## தேவை

1. விற்பனைப் பிரதிநிதி:

விற்பனைகளைக் கையாளுவதற்கும் வாகனம் செலுத்துவதற்கு சான்றிதழ் பெற்றவரும் நடுத்தர வயதுமுள்ளவரும் பிணைப்பணம் செலுத்தக்கூடியவருமாக இருத்தல் வேண்டும். முன் அனுபவம் விரும்பத்தக்கது. விண்ணப்பங்கள் சொந்த கையெழுத்தில்.

2. குளிர்சாதனப்பெட்டி ஏர்கொண்டிசன் திருத்துபவர்கள்:

முன் அனுபவம் முக்கியம்

3. குளிர்சாதனப்பெட்டிகள், அலுவலக இயந்திரங்கள் பழுதுபார்ப்பதில் அனுபவம் பெற விரும்புபவர்கள்:

ஆற்றலுள்ளவர்களும் வேலை பழகும் காலத்திற்கு ரூபா இரண்டாயிரம் செலுத்த விருப்பமுள்ளவர்களுக்கு மட்டுமே முன்னுரிமை வழங்கப்படும்.

(1 X 2 க்கும் எதிர்பார்க்கும் ஊதியத்தை குறிக்கவும். நற்சான்றிதழ்களுடன் விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்

484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## "மக்கள் சக்தியுடன் இணைந்த போராட்டம் தோல்விகண்டதில்லை"

[பண்டத்தரிப்பு]

"மக்கள் சக்தியுடன் நடந்த போராட்டங்கள் தோல்வி கண்டதாக வரலாறு இல்லை எனவே ஈழ மக்கள் ஸ்தாபன ரீதியில் ஒழுங்கமைந்து முற் போக்கான தலைமையை உருவாக்கி ஈழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கத் தமக்கள் பங்களிப்பைச் செலுத்த வேண்டும்."

ஈழ மாணவர் பொதுமன்றத்தின் நிர்வாகச் செயலாளர் திரு. மு. டேவிட்சன் காரைநகர் கோவளத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

கோவளம் இளைஞர் மன்றத் தலைவர் திரு வி ரி சிவகுமாரன் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் திரு. டேவிட்சன் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"சந்தர்ப்பவாத அரசியல் கட்சிகளால் இதுவரை ஏமாற்றப்பட்ட மக்களை அரசியல் ரீதியில் வளர்ந்து வரும் எமது ஈழ மாணவர் மன்றத்தின் வளர்ச்சியையும் மக்கள் மத்தியில் பெற்றுவரும் ஆதரவையும் பொறுக்க முடியாத இவர் எமது இயக்கத்தை குட்டி இயக்கம் என்றும், இளைஞர்களை கூறு போடும் இயக்கம் என்றும் பலவாறு கூறி எங்களை மக்கள் மத்தியிலிருந்து பிரித்துவிடுவதற்கு முயற்சி செய்து வருகின்றனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை எதிர்த்து மக்கள் சக்தியைத் திரட்டி உண்ணாவிரத சத்தியாக்கிரகப் போராட்டங்களையும். ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும் நாம் முன்னின்று நடத்தி வந்துள்ளோம். மேலும் எழுச்சி யாத்திரை போன்ற வற்றையும் மேற்கொள்ள ஒழுங்குகள் செய்து வருகின்றோம்.

---

## "விடுதலை லட்சியத்தை அடையும் வரை பிரதேச அபிவிருத்திகளையும் தேவைகளையும், புறக்கணிக்கமுடியாது"

-- சாவகச்சேரி எம். பி.

(மட்டுவில்)

"எமது விடுதலை இலட்சியத்தை நாம் அடையும் வரை எமது இயக்கம் தொடர்ந்தும் விடுதலை இயக்கமாகவே இயங்கிக் கொண்டிருக்கும் அதே வேளையில் எமது தேவைகளையும் எமதுபிரதேச அபிவிருத்திகளையும் நாம் புறக்கணித்துவிட முடியாது. ஆகவே நாம் அனைவரும் எமது இயக்கத்தின் உறுப்பினர்களாக மாற வேண்டும் ஏப்ரல் மகாநாட்டிற்கு முன்பு எமது கிளைகள் அனைத்தும் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும்.

சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம் சாவகச்சேரி தமிழர் விடுதலைக் கூட்டணிக்கிளையின் பொதுச்சபைக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி உரைநிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து தனது உரையில் கூறியதாவது எமது இயக்கம் ஒரு விடுதலை இயக்கம் நம்மை நாம் ஆளும் நிலை எமக்கென்றொரு நாட்டை அமைப்பது தத்துவரீதியில் இலகுவானது. விடுதலை இயக்கத்தில் அனைவரும் அங்கத்துவம் வகிக்க வேண்டும். அது மட்டுமல்ல அனைவரும் ஒரே இலக்குடன் செயற்பட வேண்டும். திட்டமிட்டுச் செயற்படும் ஐரிஸ் பாலஸ்தீன விடுதலை இயக்கங்களை எமது இயக்கமும் உற்று நோக்க வேண்டும். இப்படியான ஒரு விடுதலை இயக்கத்தின் உறுப்பினர்கள் மத்தியில் எந்தவித வேற்றுமைகளுக்கும் இடமிருக்கக் கூடாது.

கட்சியின் துணைத்தலைவரும் சாவகச்சேரி நகரபிதாவுமான சமுகஜோதி சி, மயில்வாகனம் பேசுகையில் தமிழர் விடுதலைக் கூட்டணி தொடர்ந்தும் ஒரு விடுதலை இயக்கமாக இருக்கவேண்டும் என்றால் இந்த இயக்கத்தில் அனைவரும் அங்கம் வகிக்க வேண்டும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் மகாநாட்டிற்கு முன்னர் எமது சகல கிளைகளும் புனரமைக்கப்பட்டு நாம் அனைவரும் அதன் உறுப்பினர்களாக மாற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

வட்டுக்கோட்டையின் புதிய எம். பியாக டாக்டர் நீலன் திருச்செல்வம் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் கூறினர்.

---

## மது அருந்துவதற்கு வெளிநாட்டுப் பணம் கிடைக்காததால் தற்கொலை!

(மாவிட்டபுரம்)

மகன் வெளிநாட்டிலிருந்து அனுப்பிய பணத்தில் மது அருந்துவதற்குப் பணம் கேட்ட தந்தையொருவர் மகன் பணம் தர மறுத்தமையால் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

பலாலி தெற்கு வசாவிளானைச் சேர்ந்த பேதுறு ஞானமுத்து 51 வயது) என்பவரே இவ்வாறு தற்கொலைசெய்து கொண்டவராவார்.

காலமானவர் எந்தநேரமும் மதுபோதையிலே இருப்பதாகவும், அதன்காரணமாகக் குடும்பத்திலும் வறுமை ஏற்பட்டு அவரது மகன் வெளிநாடு சென்று உழைக்கு நிலை ஏற்பட்டதாகவும், பலரிடங்களில் கடன் வாங்கி வெளிநாடு சென்ற மகன் முதன் முதலாக வீட்டுக்குப் பணம் அனுப்பியிருந்ததாகவும் அப்பணத்தைக் கொண்டு காலமானவரின் மகன் கடன்களை திருப்பிக்கொடுத்ததாகவும் அச்சமயம் காலமானவர் தமக்கு மதுஅருந்த பணம் தருமாறு மகளிடம் கேட்டதாகவும் பணமில்லையென்று கூறியதும் அவர் கழுத்தில் சுருக்கிட்டதாகவும் விசாரணையில் தெரியவந்தது.

திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. மு. திருநாவுக்கரசு விசாரணை நடத்தி தற்கொலை என தீர்ப்பளித்தார். (க)

---

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

(அரியாலை)

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கக் கூட்டம் கல்லூரி அதிபர் திரு ஆர் சச்சிதானந்தம் தலைமையில் நடைபெற்றது.

கல்லூரியின் வளர்ச்சியில் பெற்றோர் அபிவிருத்திச்சபை மட்டுமல்ல கல்லூரியின் பழைய மாணவரும் முக்கிய பங்கெடுக்க வேண்டுமென்றும், இவர்களுடைய ஒத்துழைப்பின் மூலமே கல்லூரியைத் திறம்பட நடாத்த முடியும் என்றும் தலைவர் கூறினர்.

புதிய வருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக கல்லூரி அதிபர் திரு. ஆர். சச்சிதானந்தமும். உப தலைவராக கலாநிதி சு. மோகனதாசும், செயலாளராக திரு. எஸ். விமலதாசும், உப செயலாளராக திரு. கே. நாகராசாவும், பொருளாளராக திரு. பி முத்துக்குமாரசுவாமியும், 16 நிர்வாகசபை உறுப்பினர்களும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். (ல)

---

## வட்டு. தொகுதியில் மின்சார விநியோக மாற்றம் விசாரணை செய்யக் கோரிக்கை!

(பண்டத்தரிப்பு)

சில்லாலை தெற்கிலுள்ள செட்டியடைப்பு உந்துசாந்தை வீதிக்கு மின்சார விநியோகம் செய்வதற்காக இங்கு கொண்டு வந்துபோடப் பட்டுள்ள மின்கம்பங்களை வேறொரு வீதிக்குத் தவறுதலாக இடமாற்றம் செய்துள்ளதாகவும், இதையிட்டு விசாரணை நடாத்தித் தமக்கு நிவாரணம் வழங்குமாறும் அப்பகுதி மக்கள் யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசாவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் கேட்டுள்ளனர்.

இந்தமகஜரின் பிரதி, யாழ். தொகுதி எம். பி திரு. வெ. யோகேஸ்வரனுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டைத்தொகுதி முன்னாள் எம். பி. அமரர் தா திருநாவுக்கரசு இந்த வீதியின் மின்சார விநியோகத்திற்காக ஒதுக்கீடு செய்த 10 ஆயிரம் ரூபா பணத்தின்மூலம் மின்சாரக் கம்பங்கள் போடப்

[7-ம் பக்கம் பார்க்க]

---

## ரூ. 50 ஆயிரம் ஒதுக்கீடு

[மன்னார்]

மன்னார் மாவட்ட கிராமப் புறங்களில் கால்நடை, கோழி வளர்ப்பு, மேட்டுநிலச் செய்கை போன்றவற்றை ஊக்குவிக்கும் பொருட்டு உலக தரிசன இயக்கம் 50 ஆயிரம் ரூபாவை குடும்பங்களுக்கு வழங்கியுள்ளது.

இந்நிதி மன்னார், ஆவணம் மாவிலங்கேணி, பறப்பான் கண்டல், சிறுக்குளம், தட்சணமருதமடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட அடிபகுதி கிராமஅபிவிருத்திச் சங்கங்களினூடாக வழங்கப்பட்டுள்ளது. (க)

---

## இலவச ஆங்கில போதனை

(கிளிநொச்சி)

'மாணவர்களின் கல்வி அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு ஆங்கிலக் கல்வி நிலையம் ஒன்றை ஆரம்பித்து நடத்த முன்வந்த கிறிஸ்தவ விசுவாச ஜெப ஆலயத்தினரை மனதாரப் பாராட்டுகிறேன்'. கிளிநொச்சி 155-ம் கட்டை கிருஷ்ணபுரம் உள் அரங்க கிறிஸ்தவ விசுவாச ஜெப ஆலயத்தினரால் ஆரம்பித்துவைக்க பட்டுள்ள இலவச ஆங்கிலக் கல்வி நிலையத் திறப்பு விழா வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் முன்னாள் கிளிநொச்சி பட்டினசபை உப தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகருமாகிய திரு. இ. கிருஷ்ணராசா குறிப்பிட்டார்.

வண. போதகர் எஸ் ஜோன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில், கலை இலக்கியஎழுத்தாளர் வட்டத் தலைவர் டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி, திரு. எஸ். தர்மசிங்கம், அதிபர் பொன். தில்லைநாயகம், சகி. சகோதரன் கிறிஸ்தோபர், கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் கணபதி, விழிப்புக் குழுத் தலைவர் முத்தையா ஆகியோரும் உரையாற்றினர்கள்.

திருமதி ஜோ. பொன்ரூஸ் நன்றியுரை கூறினர்.

---

## முதியோர்கள் பனை போல வாழ வாழ்த்து

[யாழ்ப்பாணம்]

"பெரியோர்களை நாம் புறக்கணித்து வாழக்கூடாது. அவர்களைக் கனம் பண்ணி வாழவேண்டும்" இவ்வாறு தொழிலதிபர் திரு. க. கனகராசா சண்டிலிப்பாயில் நடைபெற்ற முதியோர் தினவிழாவில் பேசுகையில் வேண்டுகோள் விடுத்தார்.

சண்டிலிப்பாய் கிராமோதய சபையினர் இந்த விழாவைக் கிராமாபிவிருத்திச் சங்க ஆதரவுடன் நடாத்தினர்.

சண்டிலிப்பாய் வடக்கு சனசமூக நிலையத்தில் திரு. மா. பொ. செல்வரத்தினம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

திரு. கனகராசா, சமூகமளித்திருந்த முதியோர்களுக்கு பனை சின்னம் பொறிக்கப்பட்ட துவாய்களை அன்பளிப்பாக வழங்கி 'பனை போல வாழ வேண்டும்' என வாழ்த்தினர். சிறுவர்களுக்கு இலவசமாக கொப்பிகள், எழுத்துமட்டைகள் வழங்கினர்.

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. பி எஸ். பற்றிக், சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. அ. மகாதேவா உட்படப் பலர் உரைநிகழ்த்தினர். இணக்க சபையும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. [மா]

---

## மடிப் பிச்சைக்காரன் பொலிஸில்!

(கோண்டாவில்)

மடிப்பிச்சையெனக் கேட்டு வந்தவர் சிறுமியின் காதுவளையங்களைத் திருடிச் சென்ற போது வழியில் சிக்கிக்கொண்டார்.

இச் சம்பவம் யாழ் நாச்சிமார் கோவிலுக்கு அண்மையில் நடைபெற்றது.

கருணாநிதி என்பவரது வீட்டில் மடிப்பிச்சை கேட்டு, வாங்கிக்கொண்டு சந்தேகநபர் வெளியேறியபோது வெளியில் விளையாடிக்கொண்டிருந்த பிள்ளையின் இரு காதுகளிலும் இருந்த தங்க வளையங்களைச் சந்தேகநபர் கழற்றிக்கொண்டு சென்றுவிட்டதாகவும் அழுதுகொண்டு பிள்ளை பெற்றோரிடம் உடன் விடயத்தைக் கூறியதைத் தொடர்ந்து சந்தேகநபர் அப்பகுதி இளைஞர்களினால் துரத்திப் பிடிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபர் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

---



50 மி. லீட்டர் ரூபா 18/70

பேசாலைக்கு மின்சாரம்:

# அபிவிருத்தி சபைக்கு ஆலய நிதியிலிருந்து ரூ. 2லட்சம்!

(மன்னார்)

பேசாலைப் பகுதிக்கு மின்சாரம் வழங்கவென பேசாலை புனித. வெற்றிநாயகி ஆலயத்திலிருந்து மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைக்கு 2 லட்சம் ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

பேசாலை கிராமத்திற்கு மின்சாரம் வழங்கவென ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு இடை நிறுத்தி வைக்கப்பட்ட மின்சார இணைப்பு வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வேலைகள் மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பேசாலைக் கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவதில் மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபை காலங்கடத்தி வந்ததால் விரக்தியடைந்த பல இளைஞர்கள் ஏற்கனவே இணைக்கப்பட்ட மின்சாரக் கம்பங்களில் வோமியா விளக்குகளை எரிய விட்டுவந்தனர். இதனை அடுத்தே மன்னார் மாவட்ட அபிவிருத்திசபை பேசாலைக் கிராமத்திற்கு மின்சாரம் வழங்கவென இடை நிறுத்தி வைத்திருந்த மிகுதி மின்சார இணைப்பு வேலைகளைத் துரிதமாக மேற்கொண்டுவருகிறது.

பேசாலைக் கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கான வேலைகளை மேற்கொள்ள 3 லட்சத்து 16 ஆயிரம் ரூபா செலவாகுமென மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபையால் மதிப்பிடப்பட்டிருந்தது.

பேசாலை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திலிருந்து மின்சாரத்தைப் பெற்றே மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபை பேசாலைப் பகுதிக்கு மின்சார விநியோகத்தை மேற்கொள்ளு [அ]

## கிளிநொச்சி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

எம். பி, திரு வி. ஆனந்தசங்கரி மாடிக்கட்டிடத்தைத் திறந்து வைத்துப் தொலைக்காட்சி பெட்டியையும் அதிபரிடம் கையளித்தார். வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு எம் சிமியாம்பிள்ளை மின்சார ஒளியை ஆரம்பித்து வைத்தார். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன சமூக சேவையாளர் திரு. இ. கிருஷ்ணராசா சிறப்புரையாற்றினார்.

### குடியியல் விவசாயப் பயிற்சி

கிளிநொச்சியிலுள்ள தேசிய இளைஞர் சேவை மன்றப்பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன குடியியல், விவசாயம் ஆகிய துறைகளில் நாற்பது இளைஞர், யுவதிகள் இப் பயிற்சியைப் பெறுகின்றனர். பயிற்சி நிலையப் பொறுப்பதிகாரி திரு க. விவேகானந்தன் தலைமையில் இப்பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன.

### வீதிகள் படுமோசம்!

ஜெயந்தி நகரில் உள்ள வீதிகள் செப்பனிடப்படாமல் குண்டும் குழியுமாகவுள்ளன. இதனால் இப்பகுதி மக்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளனர் பல வருடங்களாகத் திருத்தம் செய்யப்படாமல் உள்ள இவ் வீதிகளைத் திருத்தி அமைக்குமாறு இப்பகுதி மக்கள் யாழ். மாவட்ட கிளிநொச்சி உப அலுவலகத்தைக் கோருகின்றனர்

கிளிநொச்சிப் பிரதேசத்தில் உள்ள வாய்க்கால்களில் தடிகள், குப்பை கூளங்களைப் போடுவதால் விவசாய நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சுவதில் தடங்கல் ஏற்பட்டு வருவதாகவும் வாய்க்கால்களில் குப்பை கூளங்களைப் போடவேண்டாமெனவும் இப்பகுதி மக்களை நீர்ப்பாசனப்பகுதியினர் கோருகின்றனர். அத்துடன் வாய்க்கால்கள் தடைபடுவதால் நீர் தேங்கி அருகிலுள்ள வீதிகளையும் சேதப்படுத்தப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

## மின்சார...,

[6ம் பக்கத் தொடர்ச்சி]

பட்டதாகவும், பின்பு அந்த வீதியின் பெயரைக் கொண்ட மற்றொரு வீதிக்கு பண்டத்தரிப்பு உப அலுவலக மின்சாரப் பகுதியினர் மின்விநியோகம் செய்ய முயற்சிகள் மேற்கொள்வதாகவும், இதனால் தாம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதுபற்றி பூரண விசாரணையொன்றை நடாத்தித் தமக்கு நிவாரணம் வழங்குமாறும் இந்த மகஜரில் மேலும் கூறப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையின் வட்டுக்கோட்டைத் தொகுதிக்கான உறுப்பினர்கள் திரு. சு நடேசு, திரு ச. பூபாலசிங்கம் ஆகியோரிடமும் இப்பகுதி மக்கள் இதுபற்றி முறையிட்டுள்ளனர். (க)

# இன்றைய பலன்

மாசி மாதம் 17-ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(1—3—83)

மேடம்: செய்யும் தொழிலில் சிரமங்கள் தோன்றக் கூடும். உடல் நலமும் சிறிது பாதிக்கப்படலாம், நண்பர் ஒருவர் உங்கள் காலைவாரிவிடுவதற்கு முனையக்கூடும்.

இடபம்: புதிய இடங்களிலிருந்து உங்களுக்கு ஆதரவு வளரும். பிறருக்கு உதவவதால் பெற்றோர் உங்களை மகிழ்விப்பார்கள், போதும் என்ற மனத்துடன் வாழ்வீர்கள்.

மிதுனம்: வாழ்வுப் பாதையில் வளமான திருப்பம் தென்படும். தொழில் துறையில் மேலதிகாரிகளின் முன்னேற்றமுண்டு, சிலர் வாழ்க்கையில் சுரசினர் விருந்துக்கு இடமுண்டு

கடகம்: எதிர்பாராத பொருள் வரவும் பொதுசன மதிப்பும் இன்று கிட்டலாம், நன்மையான காரியங்களில் பணச் செலவும் ஏற்படலாம், டாக்டர்கள் தொழிலில் பிரகாசிக்க முடியும்

சிங்கம்: ஏமாற்றத்தின் தாக்குதல் உங்களுக்கு சோர்வைத் தரலாம், குடும்பத்திலும்சிறிய பூசல்கள் தலைதூக்கும், தனி வழிப் பயணத்தைத் தவிர்த்துக்கொள்ளவும்.

கன்னி: ஆத்திரப் போக்கு அருமையான சந்தர்ப்பத்தை இழப்பதற்கு இடமளிக்கும். வேண்டியவர்களைப் பகைத்துக் கொள்வீர்கள், மோதல்களைத் தவிர்க்கவும் பிறருடன்.

துலாம்: நிதியில் நல்ல அபிவிருத்தி காணப்படுகின்றது. நீண்டநாள் கடன் தொல்லை இன்று நிவர்த்தியாகும், கணவன் மனைவி உறவு முறைகள் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும்

விருச்சிகம்; எதிலும் அலட்சியமனப்பான்மை தோன்றக் கூடும், சகோதர வழியால் சஞ்சலத்துக்கும் இடமுண்டு இனபந்துக்களின் தொல்லைகள் அதிகரிப்பதற்கு இடமுண்டு.

தனு: அன்னைவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். அறிஞர்களின் தொடர்புகளும் கிடைக்கலாம். எடுத்த முயற்சியைச் சிறப்பாகச் சாதிப்பீர்கள், பொருள் வரவும் உண்டு.

மகரம்: வானொலி பாடி போக்கானம் இசைப்பீர்கள், வாழ்விலும் ஒளிவீசும், முன்னேற்றமான தினம், முதியவர்ஒருவர் உமக்கு நல்வழி காட்டுவார், அன்பு வளரும்.

கும்பம்: எக்காரியத்திலும் அதிக கவனம் செலுத்துவது விரும்பத்தக்கது. உதவி செய்யப்போய் குறைகேட்க நேரிடலாம், தற்பெருமை மூலம் தடுமாற்றம் ஏற்படும்.

மீனம்: மனதுக்கு மகிழ்ச்சியைத்தரும் சம்பவங்கள் இடம் பெறும், குடும்ப வாழ்க்கையில் தென்றல் வீசும், தொழில் துறையிலும் புதிய வாய்ப்புக்கு இடமுண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை.

# போத்தலில் கள்ளடைக்கும் தொழிற்சாலை

## கம்பர்மலையில் வேலைகள் துரிதம்

(கரவெட்டி)

கட்டைவேலி - உடுப்பிட்டி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தினால் கம்பர்மலையில் நிறுவப்படவுள்ள போத்தலில் கள்ளடைக்கும்தொழிற்சாலைக்கான கட்டிட வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

5 லட்சம் ரூபா செலவில் நிறுவப்படவுள்ள போத்தலில் கள்ளடைக்கும் தொழிற்சாலைக்கான கட்டிடம் ஒரு லட்சம் ரூபா செலவில் நிறுவப்படவுள்ளதாக பிரஸ்தாப சங்கப் பொது முகாமையாளர் திரு சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

போத்தலில் கள்ளடைக்கும் தொழிற்சாலைக்கென உடுப்பிட்டி எம் பி, திரு த. இராசலிங்கம் ஒரு லட்சம் ரூபாவை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## கடலணை வேலைகள்

(மன்னார்)

வங்காலையில் கடலரிப்பைத் தடுக்கும் பொருட்டு ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு இடைநிறுத்தி வைக்கப்பட்ட கடலணையின் மிகுதி வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும். இதற்கான நடவடிக்கைகளை மன்னார் எம்.பி திரு பி.எஸ். சூசைதாசன் மேற் கொண்டு வருகிறார். (அ)

## கிராம அபிவிருத்திச் சங்கம்

(யாழ்ப்பாணம்)

கருகம்பனை மயிலங்கூடல் கிராம அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் சங்கத்தலைவர் சு. கனகசபை தலைமையில் சென்றவாரம் நடைபெற்றது. சங்கமண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் புதியவருட நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது.

போசகர்கள் மாண்புமிகு எதிர்க்கட்சித்தலைவர் அ. அமிர்தலிங்கம் டாக்டர் சு. பொன்னம்பலம், வ. கந்தையா, தலைவர் சு. கனகசபை உபதலைவர்கள் ச. வரதராசப்பெருமாள், ம. பார்வதிநாதசிவம், செயலாளர் உ. இரவீந்திரன், உதவிச்செயலாளர் சி. நிர்மலன், பொருளாளர் வே, நித்தியானந்தன் உறுப்பினர் ஐவரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## இன்று மெய்வல்லுநர் போட்டி

[கொடிகாமம்]

கொடிகாமம் அரசினர் திருநாவுக்கரசு மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் வித்தியாலய மைதானத்தில் அதிபர் க. பேரம்பலம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக சாவகச்சேரி எம்.பி திரு வி என் நவரத்தினமும், சிறப்பு விருந்தினராக வட்டாரக்கல்வி அதிகாரி திரு கு சோமசேகரமும் கலந்து கொள்வார்கள். வரணி மகாவித்தியாலய அதிபர் பொன் கந்தையனார் கொடியேற்றி வைப்பார் திருமதி ஐ. சோமசுந்தரம் பரிசில்களை வழங்குவார். [க]

## கமத்தொழில் இடாப்புகள்

[மாவிட்டபுரம்]

கீரிமலை கமத்தொழில் சேவை நிலையப்பகுதியில் இந்த ஆண்டுக்கான கமத்தொழில் இடாப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதிப் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களால் தயாரிக்கப்பட்டுள்ள இந்த இடாப்புகள் அவர்களது காரியாலயத்திலும், கமத்தொழில் சேவை நிலையத்திலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி பதிவுகள் சம்பந்தமான விவசாயிகளது திருத்தங்கள் கோரப்பட்டுவன [அ]

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி- 4-15, 7-00
சனி. ஞாயிறு 1-30
ரவிச்சந்திரன்- ஜெயலலிதா
நான்

சில தினங்கள் மட்டும்
மனோகரா தினசரி
(யாழ்.நகர்) 10-30, 2-15, 6-00, 9-45.
என். டி ராமராவ், கே. மாலதி, எஸ்.வி. ரங்கராவ், ரேலங்கி
பாதாள பைரவி

ரீகல் (யாழ். நகர்)
இன்று மட்டும்
எங்க வீட்டுப் பிள்ளை
விரைவில்
சட்டம் ஒரு இருட்டறை

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சுதாகர் - ராதிகா
கிழக்கே போகும் ரயில் (கலர்
3-3-83 வரையும்

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
என் அண்ணன்

லிடோ (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமல்-ஸ்ரீதேவி
பதினாறு வயதினிலே

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30, 9-45
எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி - பாலாஜி
நம்பியார், எம். ஆர். ராதா
என் கடமை
புத்தம் புதிய பிரதி

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-30
கமலஹாசன்
ஸ்ரீதேவி
குரு
அடுத்தது சிவாஜி நடித்த
கீழ்வானம் சிவக்கும்

வின்ஸர் (யாழ். நகர்) கடைசி சில தினங்கள்
வசந்த மாளிகை (புதிய பிரதி)
11-3-83 முதல்
மகாசிவராத்திரி வெளியீடு!
சிவகுமார், சரிதா, சில்க் சுமிதா
வண்டிச்சக்கரம்
(கலர்)

குறிப்பிட்ட தினங்கள் மட்டும்
ராஜா (யாழ்- நகர்) தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
சிவாஜி - சாவித்திரி - தேவிகா
கர்ணன் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி(ஈஸ்ட்மன்கலர்)
பாடசாலை பிள்ளைகளுக்கு விசேட ஒழுங்குகள் செய்து தரப்படும். முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.
எமது அடுத்த வெளியீடு
துணிவே துணை

சில தினங்கள் மட்டும்
ராணி தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
(யாழ். நகர்)
ஆந்திர முதலமைச்சர் என். டி. ராமராவ்,
ஜெமினி - சாவித்திரி நடித்த
மாயா பஜார்
வருகிறது!
தேடிவந்த மாப்பிள்ளை
(புதிய பிரதி)

## 2 பஸ்கள் தீக்கிரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டது இந்த பஸ் காங்கேசன் துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பிரயாணிகளுடன் பலாலி வீதி வழியாக வந்து கொண்டிருந்தது.

23 ஸ்ரீ 8033 பஸ் பழுதடைந்து கோண்டாவில் டிப்போவில் திருத்தப்பட்டு பின்னர் பொடிகாமம்—கீரிமலை சேவைக்காக யாழ் பஸ் நிலையத்துக்கு பலாலி வீதிவழியாக வந்து கொண்டிருந்தது

இரு பஸ்களும் திருநெல்வேலி சந்தியைத் தாண்டியதும் இனந்தெரியாத கோஷ்டி ஒன்றினால் தடுத்து நிறுத்தப்பட்டன

முதல் பஸ் சாரதியான எஸ். இராசரட்னமும் நடத்துனர் எஸ் துரைசிங்கமும் துப்பாக்கி இளைஞர்களால் பஸ்ஸை விட்டு இறக்கப்பட்டனர். பின்னர் அப் பஸ்ஸில் பிரயாணம் செய்த பிரயாணிகளும் பீதியடைந்து முண்டியடித்துக் கொண்டு தாங்களாக இறங்கி ஓடத்தொடங்கினர்.

இந்த பஸ்ஸின் முன் டயர் உட்பட சிறுபாகம் தவிர, மீதிப்பாகம் முழுவதும்எரிந்து விட்டது.

இதனைத் தொடர்ந்து சென்ற அடுத்தபஸ் முற்றாக எரிந்து விட்டது. இதில் சாரதியான பி தெய்வேந்திரமும் நடத்துநர் ஏ ரத்னராசாவும் மாத்திரம் இருந்தனர் இவர்களிருவரும் துப்பாக்கி முனையில் இறக்கப்பட்டு பஸ் தீயிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது

போத்தல்களில் கொண்டு வரப்பட்ட பெற்றோலை ஊற்றியே இருபஸ்களும் எரிக்கப்பட்டனவாம்.

### ஒருவர் எரிகாயம்

இரு பஸ்களும் எரிவதாக கோண்டாவில் பஸ் டிப்போவுக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து சாலை அதிபர் பி. மகாலிங்கம் தலைமையில் 17 பேர் கொண்ட கோஷ்டி ஒன்று தீயணைக்கும் வாயுவுடன் உடனடியாகப் பஸ்ஸில் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு விரைந்தது. இக்கோஷ்டியில் பஸ்நிலைய பாதுகாப்பு அதிகாரிகள், பொறியியலாளர்கள், ஊழியர்கள் இருந்தனர்.

எரிந்து கொண்டிருந்த இரு பஸ்களையும் அணைக்க முற்பட்ட போதும் பலனளிக்கவில்லை, தீயணைக்கும்போது பொறியியலாளரான ராஜதுரை என்பவர் தீக்காயங்களுக்குள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்,

பஸ்களுக்குத் தீயிட்ட கோஷ்டியினர் துண்டுப்பிரசுரங்களையும் வீசிவிட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தை அறிந்து இராணுவத்தினரும், பொலிசாரும ஸ்தலத்துக்கு விரைந்து, எரிந்த பஸ்களைப் பார்வையிட்டனர், அப்பகுதியால் வந்த இளைஞர்கள் சிலர் தாக்குதலுக்குள்ளானதாகவும், மதில் சுவர்களில் ஒட்டப்பட்டிருந்த துண்டுப்பிரசுரங்களை அகற்றும்படி அவர்கள் பணிக்கப்பட்டதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 3-ம் திகதி இதே பாதையூடாக வந்த பஸ் ஒன்றும் கந்தர்மடம் சந்திக்கு அருகில் தீக்கிரையாக்கப்பட்டது தெரிந்ததே. (மா)

## விசேட...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

### ஆணையாளருக்கு புகார்!

இது சம்பந்தமாக தாம், மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு சி.வி.கே சிவஞானத்துக்குப் புகார் செய்ததாகவும், அவர் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் பேரில், திரிபோஷ மா பைக்கட்டுகள் கடத்தப்பட்ட சம்பவங்கள் தெரிய வந்துள்ளதாகவும் திரு தம்பு.சுந்தையா கூறினர்

### குற்றச்சாட்டு பாரதூரமானது

உறுப்பினர் சுமதிப இக்குற்றச்சாட்டு பாரதூரமானது என்று பதிலளித்த முதல்வர், ஆணையாளர் வந்ததும் ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்ட பின் நடவடிக்கை எடுப்பேன் என்று உறுதியளித்தார்.

### தற்காலிக ஊழியர் பிரச்சனை

யாழ் மாநகராட்சி மன்றத்தில் கடமையாற்றும் தற்காலிக ஊழியர்கள், மற்றும் வெற்றிடங்கள் சம்பந்தமாக திரு ஆ. துரைராஜசிங்கம் கிளப்பியபிரச்சனை குறித்து, முதல்வர் பதிலளிக்கையில், ஒருவிஷேச கூட்டம ஒன்றைக் கூட்டி ஆலோசித்து முடிவு செய்யப்படும் என்றார்

முதல்வர் திரு இராஜா.விஸ்வநாதன் கொண்டுவந்த கீழ்க்காணும் தீர்மானம் நிறைவேறியது.

'திருகோணமலை கோணேசர் ஆலயத்தையும், சுவாமி மலைப்பகுதியையும் இந்துக்களுக்கு புனித நகராகப் பிரகடனம் செய்ய வேண்டும் என்று ஜனாதிபதியைக் கேட்டுக்கொள்வது. (மா)

## விசாரணைக் குழு அமைத்து...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

களுக்குமுன் ஓர் துண்டுப்பிரசுரம் வெளிவந்தபோது கூட்டுறவுப் பகுதியின் கணக்காய்வாளரின் அறிக்கை மக்களுக்கும் பொதுச்சபைக்கும் உத்தியோக பூர்வமாக வெளிவராத காரணத்தினால் புள்ளி விபரங்களோடு கூடிய மறுப்பை நான் வெளியிட முடியவில்லை. இன்னும் கையொப்பமிடப்படாத அறிக்கையின்பிரதியை வெளியில் விட்டவர் யார்? இவற்றை விசாரணை செய்ய ஒரு விசாரணைக்குழு நியமிக்கப்படுமாயிருந்தால் உண்மை நிலையை வெளிப்படுத்த முடியும்.

யாழ். பலநோக்கு கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபையும், கூட்டுறவுத்திணைக்கள கணக்காய்வுப் பகுதியினரும் மூன்று நாட்களாக நடத்திய ஆய்வின் பின்னர்குறிப்பிட்ட அறிக்கையில் காணப்பட்ட பாதகமான குறிப்புகள் பல தவறானவை என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது இன்னும் பல ஆய்வுகளின்பின் உத்தியோகபூர்வமான அறிக்கை வெளியிடப்படும். அப்போது உண்மை நிலையை மக்கள் அறிவார்கள். இதை நான் செய்வதைத் தடுத்து அப்பொய்யான குறிப்புகளையே மக்கள் மத்தியில் நடமாடவிட்டு எனது பெயரையும் எனது இயக்கத்தின் பெயரையும் மாசு படுத்தும் நோக்கத்தோடு இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது

'ஊழல் நடவடிக்கைக்காக வேலைநீக்கம் செய்யப்பட்ட தண்டிக்கப்பட்ட ஊழியர்களின் பங்கும் இதில் என்ன என்பதை ஆராயவேண்டும். என் பொது வாழ்வு ஒரு திறந்த புத்தகம். அதில்மூடி மறைப்பதற்கு ஒன்றும் இல்லை. நான் ஆஸ்பத்திரியில் இருந்து வெளிவந்தவுடன் உண்மை நிலையை பொது மக்களுக்கு விளக்குவேன். அப்பட்டமான பொய்க் குற்றச்சாட்டை என் மீது சுமத்தி, தாமே தீர்ப்பும் வழங்கித் தண்டனையும் வழங்க முற்பட்டவர்கள் உண்மையை உணரும் நாள் விரைவில் வரும். மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பதைப் போல, கோழைத்தனமாகச் செய்தவர்களுக்குத் தெய்வத்தின் முன் பதில் கொடுப்பேன்.

'முன் வெளியான பிரசுரத்திற்குரிய பதிலை சம்பந்தப்பட்ட விபரங்களோடு வெளியிட சங்கத்தை பணித்துள்ளேன். இரண்டொரு தினத்தில் பதில் பிரசுரம் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும், என் நிலையை உணர்ந்து கண்ணீர் சிந்தும் என்மீது அன்பு கொண்ட மக்களின் மனஆறுதலுக்காகவே இவ்வறிக்கையை விடுக்கின்றேன். உண்மை நிலை தெரியாது செயற்பட்டு இந்த இடரை விளைவித்தவர்களை நானும் மன்னிக்கிறேன், நீங்களும் மன்னித்துவிடுங்கள்.'

## மருதனுமடம் ஆசிரமத்தில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சுவாமியாரின் ஆச்சிரமத்துக்கு நான் சென்றபொழுது சுவாமிகள் எதிர்கொண்டு வரவேற்றார்

இராணுவத்தினர் சகல அறைகளையும் பார்வையிட்டு திறந்து அலசி ஆராய்ந்தனர். புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்த அறைகள், சமயலறைகள், சுவாமிகள் தங்கியிருக்கும் விடுதிக்குள் புகுந்து அவரது புத்தகங்கள், எழுத்துப் பிரதிகள், உடுப்புப் பெட்டிகளும் சோதனையிட்டனர்.

ஆசிரமத்தில் தங்கியிருக்கும் மாணவர்களின் விடுதிகளும் சோதனைசெய்யப்பட்டன

உலோகப்பொருட்களைக்கண்டு பிடிக்கும் கருவி மூலம் சோதனை நடத்தியபோது ஆசிரமத்தின் ஒரு இடத்தில் அக் கருவி சமிக்ஞை செய்தபோது அந்தப்பகுதி நிலத்தை தோண்டும்படி உத்தரவிட்டனராம்.

சற்று ஆழத்திலிருந்து உக்கிப்போன இரும்புத்துண்டொன்று மாத்திரம் இருக்க இராணுவத்தினர் கண்டனராம்.

'இது அவர்களுக்குப் பெருத்த சிரமத்தை ஏற்படுத்தியது' என்று சுவாமிகள் சொன்னார்,

## யாழ். மாவட்ட சாரண ஆணையாளர் காலமானர்

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரத்தில் நடைபெற்றுவரும் 3வது தேசிய ஜம்போறியில் கலந்துகொள்ளும் 145 பேர்கொண்ட யாழ் மாவட்ட சாரணர் குழுவுக்கு தலைமை தாங்கிச் சென்ற யாழ். மாவட்ட சாரண ஆணையாளர் திரு. க. சச்சிதானந்தன் நேற்று மாரடைப்பினால் காலமானர்

மூளாயைச் சேர்ந்த இவர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றி வந்தார்.

பல வருட காலமாக இவர் சாரணீயத்தில் ஈடுபாடு கொண்டு, அதன் வளர்ச்சிக்காக அயராது உழைத்துவந்தார். [வெ]

## இன்று

(யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் கடை வீதி, வேம்படி சித்திவிநாயகர்ஆலய வருடாந்த சண்டேஸ்வரர் உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கிறது.

## வட்டு. எம். பி.யாக

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுசம்பந்தமான கடிதத்தை தமிழர் விடுதலை கூட்டணி செயலாளர் நாயகம் திரு ஏ. அமிர்தலிங்கம் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பியுள்ளார்.

## தங்கத்துரை..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நான்காவது குற்றச்சாட்டின் மீதும் அனைவருக்கும் ஆயுள்கால தண்டனை விதிக்கப்பட்டது.

### ஏககாலத்தில் தண்டனை

இத்தண்டனைகளை ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிபதி அறிவித்தார்.

### 150 பக்கங்களில் தீர்ப்பு விபரம்

தண்டனை வழங்கப்பட்டதற்கான காரணம் 150 பக்கங்கள் கொண்ட ஒருதொகுப்பாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் எதிரிகளின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி திரு என். சத்தியேந்திராவுடன், எஸ் சச்சிதானந்தன், ஜி. குமாரலிங்கம், ரி. பாக்கியநாதன் ஆகியவர்கள் ஆஜராகியிருந்தனர், திரு. எம். சிவசிதம்பரம், திரு எஸ். ருத்திரமூர்த்தி மற்றும்பல சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் காணப்பட்டனர்.

அரசதரப்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திரு. சுனில்டி சில்வா ஆஜராகியிருந்தார்.

நீர்வேலி கொள்ளைக்குப் பாவிக்கப்பட்டதாகக் கருதப்படும் மோட்டார் சைக்கிள் நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டது அதன் இலக்கம் 84 ஸ்ரீ 5186 ஆகும்.

### நீதிமன்றத்தில் எதிரிகள் உறவினர்

நீதிமன்றத்தில் எதிரிகளின் உறவினர்கள் ஏராளமாகக் காணப்பட்டனர். எதிரிகள் தீர்ப்பையடுத்து சிறைக்குக் கொண்டுபோகப்பட்டனர், போகுமுன் அவர்கள் பார்வையாளர்களோடும் சட்டத்தரணிகளோடும் கைகுலுக்கிக் கொண்டனர். (இ)


## சிசில் குளிர்சாதனப் பெட்டிகள்

உங்களுக்கு ஒரு குளிர்சாதனப் பெட்டி வேண்டுமாயின் படஜெட்டுக்கு முன் வேண்டிக்கொள்ளுங்கள்

- உலகப் பிரசித்திபெற்ற 'டெக்கும்ஷ' பிரஞ்சு மோட்டார் இணைக்கப்பட்டது.
- எல்லா உதிரிப்பாகங்களும் எம்மிடம் கிடைக்கும்.
- ஒரு வருட உத்தரவாதம்.
- எப்பொழுதும் திருத்துதல் சேவை எம்மிடம் உண்டு.

வடமாகாண விநியோகஸ்தர்கள்:

**சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிட்டெட்**

484, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.



## மரண அறிவித்தல்

**கனகசபை சச்சிதானந்தன்**

மூளாய் வாசியும், யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியரும், யாழ். சாரண இயக்க ஆணையாளரும், அருந்ததிதேவியின் அன்புக் கணவரும், சென்னை கிறீஸ்தவக் கல்லூரி மாணவன் கோவிந்தராஜன், இராமநாதன் இசைக்கல்லூரி மாணவி யசோதா, யாழ்ப்பாணக் கல்லூரி மாணவிகள் சாரதா, கோமளா ஆகியோரின் அருமைத் தந்தையுமாகிய கனகசபை சச்சிதானந்தன் 28-2-83ல் காலமாகிவிட்டார். ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: இ. ஆறுமுகம்.

மூளாய், சுழிபுரம். [6380]



## குறுகிய காலத்தில் சாதனை புரிந்தவர்கள் "டில்கா"

கண்கவர் மரத்தளபாடங்கள், கவர்ச்சியான 'மகாராஜா' செற்றிகள், போம் அன் றபர் செற்றிகள், கபினெட் அலுமாரிகள், கதிரைகள், கட்டில்கள் மேசைகள் அனைத்துக்கும்

**டில்கா பேணிச்சர் பலஸ் காட்சியறை**

234 - 236, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 24186

(FREE DELIVERY WITHIN 3 MILES RADIUS)


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number Q. B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49, Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.